
# தூயதா

இதழ் 01

நவம்பர் 2001



தமிழ்ச் சங்கம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்,
இலங்கை.

TYPE SETTING
DISSERTATION / THESIS
FOUR COLOR SEPARATIONS
BOOK PUBLISHING
FRONT PAGE DESIGNING
STENCIL CUTTING
LASER & COLOR PRINTING
SCANNING
ETC.



COMPRO
COMPRO
MAIN STREET, AKKARAIPATTU.

# உள்ளே...

| | | |
|---|---|---|
| பனித்துளியின் பாஷையில்... | தவாம் | 05 |
| வீ. ஆனந்தன் | றமீஸ் அப்துல்லாஹ் | 06 |
| கவிதை வாங்கலையோ கவிதை | வீ. ஆனந்தன் | 09 |
| விடுதலை | பி.எம். சுகீற் | 10 |
| விடைகளைத் தேடிச் செல்லும் கேள்விகள் | சிறாஜ் மஸ்ஹூர் | 14 |
| கவிதை | அதீக் ஹஸன் | 18 |
| பெண்-அழுத்தம் ஒரு சமூகப் பார்வை | சுஹிரா | 19 |
| செம்மணத்தி | அப்துல் றஸாக் | 24 |
| ஆண் சிங்கத்திடமிருந்து தப்ப முனைதல் | குர்ஷித் | 30 |
| சினிமாவில் குழந்தைகள் | அஸார் | 32 |
| அழகிய வெட்கங்களில் சில | அஸ்வர் மொஹிடீன் | 40 |
| ஆயுத இரவுகளும் ஒரு கவிஞனின் அதிர்வுகளும் | அய்யூப் | 45 |
| நானும் நீயும் நாமாய் | நவாஸ் சௌபி | 53 |
| அறிஞர் கஸ்ஸாலி கவிஞர் அல்லாமா இக்பால் ஓர் ஒப்பியல் நோக்கு | ஜெஸ்மி | 55 |
| அவளுக்கு குறிப்பும் ஸலவாத்தும் | தமீம் | 58 |

ஆசிரியர் குழு:
பிரதம ஆசிரியர்கள்

எம். அப்துல் றஸாக்
எஸ். எம். அய்யூப்
எம். வை. எம். சுஹிரா

உதவி ஆசிரியர்கள்
ஏ. ஜே. அதீக்
எம். எம். ஜெஸ்மி
எம். நவாஸ் சௌபி

தொடர்புகளுக்கு:
'துயரி'
தமிழ்ச் சங்கம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்,
இலங்கை.

கணனி வடிவமைப்பு: நா.த. அக்ரம்
கொம்புறோ
அக்கரைப்பற்று.
எழுத்தமைப்பு: எம்.எம். நபீஸ்

நெருக்கடிகள் நிறைந்த வாழ்வுக்குள் நாம் திணிக்கப்பட்டிருக்கிறோம். தேசிய அரசியலிலும், சர்வதேச அரசியலிலும் எதிர்பாராத பல திருப்பங்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இந்நிலையில், நியாயம் தர்மங்களைப் பேசி எதையும் விலைகொடுத்து வாங்கமுடியாத சூழல் எம்மை ஆக்கிரமித்திருக்கின்றது. இவ்வுரையை எழதிக் கொண்டிருக்கும் போது கூட நேற்றுவரையும் எம்முடன் இருந்த மூதூரைச் சேர்ந்த முதலாம் வருட மாணவன் நஸ்ரீத் என்பவர், நியாயங்களுக்கு அப்பாற்பட்ட துப்பாக்கி முனைகளுக்கு இரையாகி தன் உயிரை இழந்திருக்கிறார் பொதுவாக காலம் துயரங்களைத் தாங்கிய படியேதான் செய்திகளை கொண்டு வந்து எம்மிடம் சேர்க்கிறது. இச்சஞ்சிகைக்கு 'துயரி' என்ற பெயர் வைத்த காரணமும் அதுவேதான்.

கடந்த கால பல்கலைக்கழகச் சூழல் எமக்கு நிறைந்த அனுபவங்களைக் கற்றுத் தந்திருக்கிறது. எதையும் சீர்தூக்கிப் பார்த்து, பக்கச்சார்பின்றி முடிகளைத் தெரிவிக்கும் கருத்துச் சுதந்திரமெல்லாம் இச்சூழலில் அதிகமதிகமாக பேசப்பட்டு வந்திருக்கிறது. பேசுவதோடு நின்று விடுவதுதான் எங்கள் பணி எனில், இந்நேரம் வரையும் வாய்ச் சொல்லில் வீரர்களாகத்தான் இருந்திருப்போம். அவற்றையும் கடந்து நாங்கள் சிந்தித்ததன் விளைவுதான் இத் 'துயரி' சஞ்சிகை.


எந்தப் பிரகடனங்களோடும் நாங்கள் வரவில்லை. வழமையான சிற்றிதழ்கள் போன்று இதுவும் காலப்போக்கில் தூர்ந்து போகலாம். ஏனெனில் இதற்கு படிப்பு,, பரீட்சை போன்ற நம்பிக்கைப் பெறுமானங்களைத் தாண்டி மிகத் தீவிரமாக இயங்க வேண்டிய தேவை இருக்கிறது.

இதன் தேவையும், இருப்பும் நமது சுய அடையாளங்கள் என்பதை யாவரும் உணரும் போது இச்சஞ்சிகையின் வரவு தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதுதான் எமது கணிப்பு. இதற்கு தொடர்ந்தும் ஆதரவு தருவீகள் என்று நம்புகிறோம்.

மனித வாரலாற்றைப் பாதித்தவற்றில் இலக்கியத்திற்கும் பங்குண்டு என்பதில் நலிந்து விடாத நம்பிக்கை கொண்டுள்ளோம். அந்த வகையில் 'துயரி'யும் பாதிக்குமா? என்பதைக் காலம் தீர்மானிக்கட்டும். அதைக் காற்று வந்து எம் காதில் ஓதட்டும்.

- ஆசிரியர் குழு -






பவித்திரத்தின்
ஸ்பரிசங்கள்
மெல்லியதாய்
மேகம் போல் நகர்தலாயிற்று.
இன்னும்
எனது பிரார்த்தனையின்
சொற்கள் நீதான்.

தீர்ந்து விடாத தாகம்
தொண்டைக் குழிக்குள்
எஞ்சியிருக்கு.
நீ
எதிலிருக்கின்றாய்.?

இரவின் நிஷ்பதத்திலா?
பகலின் ஆர்ப்பரிப்பிலா?......

அல்லது
நீ
வெறும் வார்த்தைதானா?

இல்லை
இரகசியத்தின் மறுபக்கத்தில்
புதைந்து கிடக்கின்றாயா?

ஆராதனைக் குரியவனே!


எந்த வஸந்தத்தில்
என் முகவரியை
ஆசீர்வதிப்பாய்?

எனது ஜென்மத்தின்
படிமமே நீயேதான்.
என்னில்
ஒரு அழகிய
வண்ணத்தப் பூச்சியாய்
சிறகு விரித்துக் குந்து...

உன்னை
பனித்துளியின் பாஷையில்
நான் வாசிக்கிறேன்.

தீபம்

# வீ. ஆனந்தன்:



றமீஸ் அப்துல்லாஹ்



"ஏனென்று கேட்கக் கூடாது, இது ஆனந்தனுக்கு" என்ற கருத்துப்பட சோலைக்கிளி ஒரு புத்தகத்தில் எழுதியது ஞாபகம். அது ஏன் என்று இளந்தலைமுறையினருக்கு சொல்ல விருப்பம். அதனால் வீ. ஆனந்தனைப்பற்றிய சுருக்கமான அறிமுகத்தை இக்கட்டுரை சொல்ல முற்படுகிறது.

நான் க.பொ.த. சாதாரண தரம் படித்த காலம். சம்மாந்துறையில் ஈழமேகத்துக்கு நினைவு நிகழ்ச்சி நடந்தது. அன்றைய நினைவுப் பேருரையை 'பட்டப்பெயர் – ஒரு பண்பாட்டுப் பார்வை' என்ற தலைப்பில் ஆனந்தன் நிகழ்த்தினார். அன்றுதான் ஆனந்தனை எனக்கு நன்றாகத் தெரியும்.

ஆனந்தன் பார்ப்பதற்கு எளிமையான தோற்றம் கொண்டவர். விரிந்த முகம். இரக்கமிக்க கண்கள். ஒரு பக்கமாக தூக்கிப் போடப்பட்ட கேசம். அடர்த்தியான மீசை. அரைக்கை சேட் போடுவார். ஒரு பழைய சைக்கிளிலே வியர்க்க விறுவிறுக்க வருவார். ஆனந்தன் மிக்க ஆழமிக்கவர். குறிப்பிட்ட நினைவுப் பேருரைக்கு பின் அவரை அடிக்கடி சந்திப்பது உண்டு. அவர் பலவற்றையும் பேசுவார். எனக்கு அந்த வயதில் அவற்றை விளங்கிக் கொள்வது கஷ்டமாக இருந்தது. ஆனால், இன்று அவற்றை எண்ணுகிற போது எனக்கு நல்லதொரு வழிகாட்டியை – துணையை இழந்தது போல் அடிக்கடி சங்கடப்படுவதுண்டு. ஆனந்தன் சம்மாந்துறையில் சாதாரண வீடொன்றில் வசிப்பார். அங்கே நான் செல்வதுண்டு. அது ஒரு சிறிய வீடு. அந்த வீட்டில் அவரும் மனைவியும் தான். முன்மண்டபத்தை தூர்த்து துப்பரவாக்கி இருப்பார். அதற்குள் கதிரை இருக்காது. வெறும் நிலத்திலே படுத்துக் கொண்டு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருப்பார். நெஞ்சுக்கு ஒரு தலையணையை வைத்துக் கொள்வார். அவர் ஆயிரக்கணக்கான நூல்களை வாசித்தவர். எதனை வாசிக்க வேண்டும் என்று காட்டித்தந்தார். வாசிப்பின் அகற்சியினால் அவர் ஆளுமை அபாரமானது. எனக்குள் அவர் ஒரு பேராசிரியராகவே இருந்தார்.

1994 இல் நான் சிறப்புக் கலைமாணித் தேர்வுக்காக நாட்டாரியலையே தேர்வு செய்தேன். அவர் என் வீடு தேடி வந்து எனக்கு பல்வேறு விடயங்களை சொல்லித்தந்தார். நான் விரிவுரையாளராக தெரிவு செய்யப்பட்டதும் அவர் மிக்க மகிழ்ச்சியடைந்தார். தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருகையும் அவருக்கு மிக்க சந்தோஷத்தைக் கொடுத்தது. அவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மூலமும் என்மூலமும் நிறைய சாதிக்க விரும்புவதாக அடிக்கடி சொல்வார். ஆனால் 1995 முடிவதற்குள் அவர் மறைந்து விட்டார். அவர் மறைவதற்குள் தமிழ் இலக்கிய உலகில் பலவற்றைச் சாதித்திருந்தார்.

1960 இல் ஈழத்தில் இடம்பெற்ற மார்க்சிய சிந்தனை ஈர்ப்பிலே ஆனந்தனும் அகப்பட்டு இடது சாரி சிந்தனைகளுடன் வளர்ந்தார். தபால் வினியோகிப்பதை தொழிலாகக் கொண்டவர். அடிநிலை மக்களோடு ஆழமான தொடர்பு கொண்டவர். தன் வாழ்க்கையையும் அவர்களோடே கழித்தவர். மிகத் துணிச்சலுடன் கருத்துக்களை சொல்வதில் பலமிக்கவராக திகழ்ந்தார். அவர் எழுதியவை மிகக் குறைவு. அவர் எழுதாமல் சாதித்தவைகள் அதிகம். நல்ல வாசகனாக இருந்து புதிய தகவல்களை இலக்கிய உலகிற்கு கொண்டு வந்தவர்.

01. கிழக்கிலங்கை மக்களின் வாய் மொழி இலக்கியத்தை வெளிக்கொண்டு வருவதிலே அவர் அதிகம் அக்கறை காட்டினார். வாய் மொழிப்பாடல்கள், கதைகள், பழமொழிகள், சடங்குகள் போன்றவற்றை தொகுத்து வைத்திருந்தார். பட்டப்பெயர், மாடுகளுக்கு குறியிடல் போன்ற விடயங்களை அவர் ஆய்வு செய்தார். இது பற்றிய விபரங்கள் இருப்பின் நாம் அவற்றை வெளிக் கொண்டு வர முனைய வேண்டும்.

02. ஆனந்தன் சில கவிதைகளை எழுதியுள்ளார். அவரது கிடைக்கப்பெற்ற கவிதைகளை 'ஆனந்தன் கவிதைகள்' என்ற பெயரில் மட்டக்களப்பு வாசகர் வட்டம் வெளியிட்டுள்ளது. அக்கவிதைத் தொகுதி எம்.ஏ. நுஃமானின் முன்னுரையோடு வந்திருக்கிறது. ஆனந்தன் தன் கவிதைகள் மூலமும் சமூக அநீதிகளுக்கு எதிராக உரத்த குரல் எழுப்பியுள்ளார்.

> ''அதர்மம் நாட்டில்
> அதிகரிக்கும் போது
> கண்ணன் மட்டுமல்ல
> கவிஞனும் பிறப்பான்''

என ஆனந்தன் கவிஞனின் பிறப்பு பற்றிக் குறிப்பிடுகிறார். ஆனந்தன் பற்றிய அறிமுகத்துக்காகவும், அவருள் புகுந்திருந்த நாசூக்கான விமர்சனப் பாணிக்காகவும் அவருடைய 'கவிதை வாங்கல்லையோ கவிதை' என்ற கவிதையை இக்கட்டுரையின் பின்னிணைப்பாக சேர்த்துள்ளேன்.

03. ஆனந்தன் ஈழத்துத் தமிழ் சிறுகதை வாசகர்களுக்கு பாரிய பங்களிப்பினைச் செய்துள்ளார். ஆனந்தன் நல்ல இலக்கியங்களை வாசிக்க விரும்பியவர். அந்த உந்துதலால் சுயமாக மலையாளம் பயின்றவர். மலையாள சிறுகதைகள் பலவற்றையும் மலையாளக் கட்டுரைகள் சிலவற்றையும் தமிழ் படுத்தித் தந்துள்ளார். மலையாளத்தில் பிளம். சுகிற் எழுதிய சிறுகதையை விடுதலை என்ற பெயரில் ஆனந்தன் தமிழ் படுத்தினார். அதனையும் பின்னிணைப்பாக சேர்த்துள்ளேன். சம காலத்தில் இச்சிறுகதை பல விமர்சனங்களைத் தரக்கூடும்.

04. ஆனந்தன் பத்தி எழுத்துக்கள் எனப்படும் நிரலியல்கள் (Columns) எழுதுவதிலும் அக்கறை காட்டியவர். அவரது இத்தகைய எழுத்துக்களைத் தொகுத்து வியூகம் 'துளிர்' எனும் தொகுதியை வெளியிட்டுள்ளது. கலை இலக்கியம், சமூக, அரசியல், நினைவுகள் சம்மந்தப்பட்ட பல அத்தொகுதியுள் வந்துள்ளன.

எல்லாவற்றையும் விட ஆனந்தன் மேடை மூலம் சாதித்தவை அநேகம். ஆனந்தனின் ஆளுமையே அதுதான். அவரது மேடை விமர்சனங்கள் நமது இலக்கிய உலகிற்கு காத்திரமான பங்களிப்பாக இருக்கும். அவற்றின் பதிவு இருப்பின் அதுவும் தொகுதியாக வரவேண்டும்.

''ஆனந்தனிடத்து புலமை அகற்சியையும், விமர்சன தீட்சண்ணியத்தையும் கண்டேன். ஆனந்தனுடைய இலக்கிய பரப்பு மிக அகன்றது. அதனால் அவரது பார்வை ஈழத்து எழுத்தாளர்களின் பார்வையை விட விரிசலானதாகவும், அசாதாரணமானதாகவும் இருந்தது. ஆனந்தன், எமது இலக்கிய விமர்சன பாரம்பரியத்தினை மேலும் புதிய எல்லைகளுக்கு கொண்டு செல்லுவார் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால், அவரது மறைவு மாறாத சோகத்தைத் தருகிறது.''

என பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆனந்தன் பற்றி குறிப்பிட்டுள்ளார்.



இந்த இலக்கிய பணியை விட ஆனந்தன் அடிநிலை மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் சிறந்த சமூக சேவகனாகவும் இருந்திருக்கிறார். அதனோடு எல்லாவற்றுக்கும் மேலாக ஆனந்தன் நல்ல மனிதனாக வாழ்ந்திருக்கிறார். ஆனந்தன் பற்றிய மேலதிக வாசிப்புக்கு பின்வரும் தொகுதிகள் உதவக் கூடும்.


1. கவிஞர் வீ. ஆனந்தன் (1996)
   பொதுமக்கள் சம்மாந்துறை.
2. ஆனந்தன் கவிதைகள் (1997)
   மட்டக்களப்பு வாசகர் வட்டம்.
3. துளிர் (1996)
   வியூகம், கல்முனை.
4. ஞானம் (மே 2001)
   பேராதனை வீதி, கண்டி.
5. படி (சஞ்சிகை)
   மட்டக்களப்பு.
6. களம் (சஞ்சிகை)
   அக்கரைப்பற்று.
7. கிழக்கொலி (சஞ்சிகை)
   மட்டக்களப்பு.
8. வியூகம் (சஞ்சிகை)
   கல்முனை.

பின்னிணைப்பு :

## கவிதை வாங்கல்லையோ கவிதை – வீ. ஆனந்தன்

கவிதை வாங்கல்லையோ கவிதை.
கவிதை வாங்கல்லையோ
கவிதை நல்ல
கவிதை வாங்கல்லையோ
கவிதை
வாழ்வு என்னா வாழ்த்துக் கவி
சாவு என்னா சமர கவி
சமைஞ்ச பொண்ணுக்கு
சாத்துக் கவி
சரிகைச் சால்வை போர்த்த கவி
மல்லிகையில் மணக்கும் கவி
குமரனிலே குமுறும் கவி
சுடரினிலே சுட்ட கவி
சொந்தக் கவி இந்தக் கவி
தூசி தட்டித் துறைச்சிருக்கி
துய்மையான கவிதை
காசும் வேணாம் பணமும் வேணா
கவிதை வாங்குங்கோ

பேசும் போதும் எழுதும் போதும்
பேரைச் சொல்லுங்கோ – எங்க
பேரைச் சொல்லுங்கோ கொஞ்சம்
பெரிசாச் சொல்லுங்கோ
பத்து வருடம் பாட்டெழுதியும்
பார்க்க ஆளில்லை எம்மை
கேட்கப் பேரில்ல
புத்தகங்கள் போட்டுப் பார்த்தும்
புகழே வரவில்லை. – போட்ட
முதலும் புரளல்ல
சோலைக்கிளி பாட்டு என்றால்
சோக்கு என்கிறார் அவர்
சொக்குப் பொடி போட்டோ கவிதை
சோடிக்கிறார்
சிவலிங்கம் பாட்டு என்றால்
சிகரம் என்கிறார்
சிவசேகரத்தைப் போல பலரும்




சேர்ந்து சொல்லுறார்
எதுகை வேணும் மோனை வேணும்
என்று சொன்னோங்க
எதுவும் வேணாம் கவிதை வேணும்
என்று சொன்னாங்க
உத்தி என்றார் படிமம் என்றார்
ஒன்றும் விளங்கல்ல - இந்தப்
புத்திகெட்ட பயல்களால
புளைக்க முடியல்ல
பாண்டவர்க்காய் பாட்டெழுதி
பரிசு பெற்றோங்க பண்புகெட்ட
சூரியனுக்கும் பாட்டெழுதி
துணைக்குப் போனோங்க
ஐக்கியத்தைப் பற்றியொரு
அகவல் எழுதினோம்
அரசினரே பார்த்து விட்டு
அதிர்ந்து போனாங்க
மாதம் ஒரு கவி அரங்கு என
மகிழ்ந்திருந்தோமே - இப்ப
வரிசமொண்ட நடத்தக் கூட
வகையறியோமே
புரட்சி செய்ய பாட்டெழுதி
வரட்சி நீக்கப் பாட்டெழுதி
வறுமை போக்க பாட்டெழுதி
சாதி போக்கப் பாட்டெழுதி
சலித்துப் போனோமே - நாங்க
சலித்துப் போனோமே
தன்னைப்பற்றி புழுகுவது
தர்மம் இல்லங்க - எங்களை இத்
தறுதலைகள் புழகாத மர்மம்
என்னங்க
சந்தம் வேண்டாம் என்று சொல்லி
சத்தம் போட்டாங்க - இப்போ
உட்சந்தம் வேண்டும் என்று சொல்லி
சட்டம் போட்டாங்க
இன்ன ரிதம் இன்ன ரிதம்
என்று சொன்னாங்க - அது
என்ன ரிதம் என்ன ரிதம்
எமக்கு தெரியல்ல

●

(கல்முனை சாகித்திய விழா கவியரங்கில் வாசிக்கப்பட்டது.)





மலையாள மூலம்: பி. எம். சுகிற்.
தமிழில்: வீ. ஆனந்தன்.

அலாரம் கேட்டு விழித்துக் கொண்டாலும், வழக்கம் போல் எழுந்திருக்க தோன்றவில்லை. உடம்பு முழுவதும் அடித்து முறித்தது போல் ஒரே அசதி. தலையில் கல்லைத் தூக்கி வைத்ததைப் போல பாரம். கொஞ்ச காலமாத்தான் இப்படி என்றாலும் கேட்டதும் குதித்தெழுவதுதான் பல வருசத்துப் பழக்கம். ஆனால் இன்று அவளுக்கு எழுந்திருக்கத் தோன்ற வில்லை. எழுந்திருக்கவில்லை
என்றால் என்ன பூமி சுழலாமலா நின்றுவிடும். அவள் போர்வைக்குள் சுருண்டு கிடந்தாள்.

அலாரம் நிறுத்தப்படாமல் தொடர்ந்து அடித்துக் கொண்டிருப்பதைக் கேட்டு பக்கத்தில் படுத்திருந்த கணவன் எழுந்து அலாரத்தை நிறுத்தி விட்டு மனைவியை உலுக்கிய வண்ணம் கேட்டான்.
"என்ன இன்றைக்கு இவ்வளவு நேரமாகியும் எழும்பல்ல"
"நீங்க எழும்புங்க"
அவள் திரும்பிப் படுத்தாள்
கணவன் எழுந்து லைற்றைப் போட்டுவிட்டு அவளின் போர்வையை இழுத்தெறிந்தான்
"எழும்பிப் போய் தேத்தண்ணி போடு"
முடியாது என்று சொல்லவில்லை.
அவளுடைய முகபாவம் கண்டு கணவன் அதிர்ச்சியடைந்தான்.
அவன் உரத்த குரல்
"உன்னிடம்தான் சொல்றேன் எழுந்துபோய் தேத்தண்ணி வை"
"ஏ மனிசா முடியாது என்று சொன்னது கேட்கல்லையா, நீங்கள் காலையிலே எனக்குக் கோபத்தை உண்டாக்காமல் போய்த் தேத்தண்ணியை வையுங்கள்."

அவளுடைய கண்களை நேருக்கு நேர் பார்க்க முடியாத அவன், அடுக்களைக்குப் போனான். அவளுக்கு அடக்க முடியாத சந்தோஷம். பதினைந்து வருஷமாக இந்தத் துணிச்சலைக் காட்டாதிருந்ததை இட்டு துக்கப்பட்டாள். அவள் போர்வையால் போர்த்திக் கொண்டு மீண்டும் படுத்தாள். சுகமான ஒரு மயக்கம். காலையில் இவ்வாறு போர்வைக்குள் கிடந்து மயங்குவது ஒரு நல்ல சுகானுபவம்.

"தேத்தண்ணி"

கணவனுடைய சத்தம் கேட்டு அவள் எழுந்திருந்தாள்.

"அங்கே வையுங்கள்" என்று அவள் சொன்னாள்.

தேத்தண்ணியை சைட் ரேபிளில் வைத்துவிட்டு கணவன் போனதை ஆச்சரியத்துடன் பார்த்த வண்ணம் குளியலறைக்குச் சென்றாள்.

பல்விளக்கி, முகம் கழுவி வந்து அவள் தேத்தண்ணியை குடித்தாள். தேத்தண்ணி பரவாயில்லை. சீனிதான் கொஞ்சம் கூட. காலையில் படுக்கையில் இருந்த படியே தேத்தண்ணி குடித்த காலம் மறந்தே போய்விட்டது. கலியாணம் கட்டமுந்தி அம்மா தேத்தண்ணி போட்டு மேசையில் வைத்துவிட்டு தன்னை எழுப்புவது வழக்கம். தேத்தண்ணியை குடித்ததும் உற்சாகம் பிறந்தது. எழுந்து திண்ணைக்குப் போனாள். கணவன் முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டு சாய்மனைக் கதிரையில் படுத்த வண்ணம் பத்திரிகையை படித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்டதும் அவளுக்கு கோபம் வந்தது.

"பேப்பரா வாசித்துக் கொண்டிருக்கீங்க. அடுக்களைக்குப் போகவில்லை. எட்டு மணிக்கு பிள்ளைகளின் ஸ்கூல் பஸ் வரும்."

அவன் உறுத்திப் பார்த்தான். ஆனால் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. அவன் கையில் இருந்த பத்திரிகையை வாங்கிக் கொண்டு அவள் சொன்னாள்.

"புட்டு அவிக்க மா அலுமாரியில் இருக்கு. பழமும் இருக்கு. புட்டு மட்டும் அவிச்சால் போதும். பப்படம் வேணும் எண்டாலும் பொரியிங்க"

"எனக்கு புட்டவிக்கத் தெரியாது"

"ஓம்லெட் செய்யத் தெரியுமா?"

"ம்"

"இன்றைக்குப் பாணும் ஓம்லெட்டும் போதும், நாளையிலிருந்து புட்டவிக்கப் படியுங்க"

அவன் அப்போதும் அதிர்ச்சியுடன்தான் இருந்தான்.

" நீங்க கெதியாப்போய் பாணும் வாழைப்பழமும் வாங்கிற்று வாங்க."

அவன் வீட்டிற்குள் போய் சேட்டைப் போட்டுக் கொண்டு கூடையும் கையுமாகப் கடைக்குப் போவதைக் கண்டபோது, அவள் அடக்க முடியாத சந்தோஷத்தால் சிரித்தாள். அவன் ஏதோ சந்தேகத்தோடு திரும்பி திரும்பிப் பார்த்துப் போனான். அவன் திரும்பி வரும் போது அவள் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரம் கழிந்ததும் அவளுக்கு குளிக்க வேணும் போல் தோன்றியது. காலைக்



குளிப்பில் ஒரு பிரத்தியேக சுகமுண்டு. கல்லூரியில் படிக்கும் காலத்தில் காலையில் தேத்தண்ணி குடித்து முடிந்ததும் குளித்துவிட்டுத்தான் படிப்பது. இப்போது வீட்டு வேலை எல்லாம் முடித்து விட்டு குளிக்கப் போக ஒண்ணரை மணியாகும். அவள் ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டு அறைக்குள் போன போது கணவன் டெலிபோனுக்கு அருகில் இருக்கும் கதிரையில் இருந்து கொண்டு, டெலிபோன் டிரக்டரியில் நம்பர் தேடிக் கொண்டியிருந்தார். இப்பொழுது உள்ள டெலிபோன் டிரக்டரியில் தேவையான நம்பரை தேடிப்பிடிப்பது என்பது பெரும் பிரயத்தனமான காரியம்.

"இன்னும் அடுக்களைக்குப் போகவில்லையா? பிள்ளைகளுக்கு தேத்தண்ணி கொடுத்ததா? டெலிபோன் பேச்சை எல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம், நான் குளிச்சிற்று வாரன்." என்றாலும் அவ்விடத்தை விட்டு அசையாமல் நின்ற கணவனை நிர்ப்பந்தித்து அடுககளைக்கு அனுப்பினாள். யாருடனாவது டெலிபோனில் கதைக்கலாம் என எண்ணினாள். ஆனால் தனக்கு ஒரு தோழியும் இல்லை. அம்மாவுடன் கதைக்கலாம் என்றால் அவளுக்கு சரியாக காது கேட்காது. அவள் பாட்டொன்றை முணுமுணுத்த வண்ணம் குளியலறைக்குள் சென்றாள் கீஸரை ஒன் செய்தாள். கணவனின் கிரீமை எடுத்து உடம்பு முழுவதும் பூசினாள். தலையில் காய்ச்சிய எண்ணையைத் தோய்த்தாள். கொஞ்ச நேரம் உடற்பயிற்சி செய்தாள். தண்ணீர் சூடாகியது. குளிக்கத் தொடங்கினாள். தலையில் 'ஷம்பூ' தேய்த்துக் கழுவினாள்.

குளித்து முடிந்து உடம்பு முழுவதும் பௌடர் போட்டாள். சாறியும் பிளவுசும் மாற்றி தலைமுடியையும் அழகாக சீவி முடித்தாள். கண்ணாடியில் பார்த்தபோது முப்பத்தைந்து வயது என்று சொல்லமுடியாது. கண்ணுக்க மையிட்டு பொட்டும் வைத்த போது அவளுக்கு ஒரு திருப்தி உண்டாகியது. எல்லா அலங்காரங்களையும் முடித்துக் கொண்டு கண்ணாடியில் பார்த்த போது, அவளுக்கு ஒரு பாட்டுப்பாட வேண்டும் போல் இருந்தது. படிக்கும் காலத்தில் அழகாகப் பாடுவாள். இப்போது அவள் சாரிரம் பரவாயில்லை. கொஞ்சம் உரத்த சத்தத்தில் பாடிக் கொண்டு கதவைத் திறந்த போதுதான் கதவுவெளிப்பக்கத்தில் பூட்டப்பட்டிருந்தது தெரிந்தது. யார் வெளிப்பக்கத்திலிருந்து பூட்டியது. அவர் ஏன் என்னை அறைக்குள் வைத்துக் கதவைப் பூட்டினார். அவள் கதவிடுக்கினுள் காதை வைத்துக் கேட்டாள். கணவன் யாரையோ டெலிபோனில் அழைத்துக் கொண்டிருந்தான். அது அவனுடைய நண்பரான சைக்கியாற் றிஸ்ட். ஹலோ மூர்த்தியா நான் ராகுலன் பேசிறன். நீ கொஞ்சம் உடனே வரவேணும். என்னெண்டு தொரியா எண்ட மனைவிக்கு காலையில் இருந்து அவ்வளவு சரியில்லை. ஒரு நாளும் இல்லாத மாதிரி நடந்து கொள்கிறாள். கலியாணம் கட்டி பதினைந்து வருஷம் என்னை எதிர்த்து ஒரு வார்த்தை பேசி இருக்க மாட்டாள். இன்றைக்கு இவள் செய்யிறதெல்லாம் நேர்மாறு. முடியுமென்றால் நேர்ஸ்மாரையும் கூட்டிட்டு வா. பலம் பிரயோகிக்க வேண்டி வந்தாலும் வரும். இப்பவே இங்கு அட்மிட் பண்ணனும். தாமதிக்காத. ஓமோம் பூட்டித்தான் வைச்சிருக்கன். எனக்கு பயமாகத்தான் இருக்கு. சரி உடனே வா. வைக்கிறன்.

பிறகு அவளுக்கு ஒன்றும் கேட்கவில்லை. அவள் தனது பலம் கொண்ட மட்டும் தட்டினாள். கதவைத் திறங்கள் எனக்கொன்றுமில்லை...... நான்..... நான்..... சும்மா பகிடிக்கு... திறவுங்கள் எனக்கு அடுக்களையில் வேலை இருக்கு.... திறங்கள்... திறங்கள்...

# விடைகளை தேடிச் செல்லும் கேள்விகள்



சிராஜ் மஸ்ஹூர்



முஸ்லிம்களது அரசியல் குறித்து மிக நீண்ட வாதப்பிரதிவாதங்கள் நடந்தேறி விட்டன. வரலாற்று அழுத்தங்களை எல்லாம் மீறி புதிய இயங்குதிசையில் நகர்ந்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தத்தத்துக்கு நாம் ஆளாகியிருக்கின்றோம். நமது நடைமுறை அரசியல் குறித்து நமக்குள் மிகத் தீவிரமான கருத்துப் பரிமாறல்கள் நிகழ்துள்ளன. இன்னும் நிகழ்ந்து கொண்டிருகின்றன.

நமது சம கால அரசியலானது நமக்கு அருவருப்பூட்டுகின்ற ஒன்றாகவே வளர்ச்சியுற்று வருகின்றது. பேரினவாத கட்சிகள் பற்றிப்பேசினால் என்ன அல்லது தனித்துவக் கட்சிகள் பற்றினால் என்ன எல்லாமே இருக்கிற இருக்கின்ற நிலை நம் கனவு கண்ட நிலையல்ல.

நாம் எங்கோ கனவுகளின் எல்லைகளில் உலவுகையில் நடைமுறை அரசியல் சந்தர்ப்பவாத கொச்சைத் தனங்களுக்குள் ஊறிக்கிடக்கின்றது. சந்தர்ப்பவாதம் மீண்டும் தன்புத்தியை காட்டுகின்றபோது நமக்கு வயிற்றைக் குமட்டுகின்றது.

'முஸ்லிம் அரசியல்' இன்று அடைந்துள்ள நிலையில் வெறுமனே பரிதாபகரமானது என்று கூறிவிட்டு நாம் ஒதுங்கி விடலாமா? ஏன் எம்மை சூழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த அரசியலானது கோமாளித் தனங்களாலும் அரைவேக்காட்டு அறிவாளிகளாலும் நிறைந்து நாறிக்கிடக்கின்றது.? இந்த கேள்விகள் உறுத்துகின்ற எவருமே வெறும் பார்வையாளராக ஒதுங்கி நிற்கமுடியாத அவலத்தை உணர்கின்றனர்.

எதிர்பார்த்துக்காத்திருக்கும் அந்த லட்சிய உலகம் வெறும் கனவு என்று நாம் மிகவும் நம்பியிருக்கின்ற நண்பர்கள் கூடப் பேசிக் கொள்கின்றனர். எழுதி எழுதி எதையுமே கிழிக்கமுடியாது என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர். நமது நடைமுறை அரசியல் ஏற்கனவே தான் தீர்மானித்த வழியில் சிறிதும பிசகாமல் முன் செல்லத்தான் போகிறது. இடையில் நின்று கூப்பாடு போடும் சிலரால் அதனது வழித்தடத்தின் திசைகளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தமுடியாது என்பதே அவர்களது கருத்தாக இருக்கிறது. இத்தனைக்கும் அந்த நண்பர்கள் நடைமுறை சந்தர்ப்பவாத அரசியலின் அனுதாபிகளல்ல. மாறாக அதன் தீவிர எதிரிகள் இருந்த போதிலும் இந்தக் கோமாளித்தன அரசியலில் நம்மால் எந்தப் பாதிப்பையும் சலனத்தையும் ஏற்படுத்தமுடியாது என்ற அவர்களது அந்த ஒதுங்கு மனோ நிலைதான் எல்லாவற்றையும் விட மிகப்பெரிய அச்சுறுத்தலாய் இருக்கிறது. இதுஅந்த நண்பர்களதுகுரல் மட்டுமல்ல ஒட்டுமொத்தமான ஒரு சமூகத்தின் சிந்திக்கத் தெரிந்தவர்களது பலவீன நிலையின் வெளிப்பாடே இது எனலாம்.

தார்மீக நியாயங்களைப் பேசி சமூகத்தைத் திருத்தமுடியும் என்று நம்புவது எவ்வளவு பெரிய முட்டாள் தனம் தெரியுமா? திருத்த முடியாதளவிற்கு நமது சமூக ஒழுங்கு சிதைந்து சின்னா பின்னமாகிப் போயிருக்கிறது.

இவ்வளவு நேர்மையாக உண்மையை அப்பட்டமாக சொல்வது நமக்கு ஆபத்தில்போய் முடிவதோடு எதிரிகளைச் சம்பாதிக்க உதவுமே தவிர வேறெந்த லாபத்தையும் தராது என்று வேறுசிலர் சொல்கின்றனர். இவர்களைப் பொறுத்த வரை எழுதுவதையே நிறுத்தி விடுவது

தான் மிகப் பொருத்தமான தீர்வு. ஆனால் எழுதாமல் இருப்பது எப்படி என்பது இன்னும் புரியாத விடயமாகவே இருக்கின்றது.

இது சில தனிநபர்களது குரல்கள் அல்ல. ஒரு சமுகத்தின் வேறுபட்ட தளங்களில் இருந்து எழும் இந்தக்குரல்கள் நசுங்கி மெலிதாய் ஒலிப்பது ஏமாற்றம் தருவதாய் உள்ளது.

எதையும் ஒருதட்டையான நேர்கோட்டுத் தளத்தில் நின்று பார்த்துப் பழகிவிட்ட ஒருசமூகத்தின் எதிர்வினைகள் இப்படித்தான் அமையும் என்று மேலேழுந்த வாரியாக சமாதானம் கூறிவிட முடியும். ஆனால் எளிதில் புறக்கணிக்கும் படி அவர்களது பேச்சுகள் இல்லாமல் இருப்பதுதான் மிகவும் துயரமானது. ஒரு சமூகத்தின் ஆன்மாவே இப்படிக் காயப்பட்டுக் கிடப்பது எவ்வளவு பெரிய ஏமாற்றம்?

இந்தச் சூழ்நிலையின் போதாமைக் குள்ளும் நம்மைச் சூழ்ந்திருக்கும் அரசியல் சுழிக்குள் சிக்காத மனித ஆளுமைகளை, சில குறிப்பிடத்தக்க மீறல்களை அடையாளம் காண வேண்டும் என்கிற தாகம்தான் அடிமனதுள் ஆழம் பெறுகிறது. நாம் இந்த உலகத்தைப் பார்க்க விரும்புகிற கோணம் பலருக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருப்பது ஏன்? சிலபோது அது ஆத்திரமூட்டுகிற அளவுக்கு வளர்ச்சியுற்றிருப்பதும் ஏன்? இந்த மனிதர்கள் இறுகிப்போன தங்களது வரையறைகளுக்குள்ளேயே இன்னமும் நின்று சுழல்கிறார்கள்.

சமூக மாற்றம் என்பது நம்கண்முன்னே நிழந்துவிடுகிற ஒரு மெஜிக் அல்ல. அதுபடிமுறை நகர்வுகளினூடாக அடையப்படுவது என்ற பொது உண்மை இங்கு எல்லோருமே தெரிந்த ஒன்றுதான். ஆனாலும் அந்த உண்மைகளை மாயத்திரைகள் மூடியிருக்கின்றன.

எந்த சமூகமும் இயக்கமுறாது தேங்கிநின்றுவிடுவதில்லை.அதுகாலத்தின் திசை வழியே மாற்றங்களை ஏந்தி நகர்ந்து கொண்டிருக்கிறது. பல ஆண்டுகளுக்குமுன் நமது முன்னோர்கள் விதைத்த, அவாவிநின்ற எத்தனையோ மாற்றங்களை நாம் நிழ்த்துகிறோம். இதேபோன்ற ஒரு மாற்றத்தையே இன்று நாம் விரும்பி நிற்கிறோம்.

இது நமது வரலாற்றின் இயங்கு விதிகளினூடாக என்றோ ஒருநாள் நடைபெறலாம், நடைபெறும் என்ற நம்பிக்கைதான் நமக்காதாரம். நிகழ் காலத்தில் நின்றுகொண்டு எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திக்கின்றவன்தான் மனிதன். அவன் வெறுமனே நிகழ் காலத்தின் கைதியல்ல.

துரதிஷ்டவசமாக நமது சூழலின் இறுக்கங்கள் நமக்கு ஆரோக்கியமான எதிர்வினைகளைத் தருவதாயில்லை. இது நமது தலைவிதிமட்டுமல்ல வரலாறு நெடுகிலும் தாம் வாழுகின்ற சமூகத்திலிருந்து வேறுபட்டுச் சிந்திக்கின்ற எல்லோருக்குமே இதுதான் நிகழ்ந்தது. இந்த எதிர்வினைகளை மீறிச் செயற்படுவதில்தான் வெற்றி தங்கியிருக்கிறது. பண்பாட்டுச் சூழலின் தேக்கம், சூழ்நிலையின் நிர்ப்பந்தம் போன்ற வேறுபட்ட பரிமாணங்களுக்குள் நம்மை அமுக்கி விடுவதற்கும், நமது சிந்தனை திசைகளை விரிவடையாது தடுப்பதற்குமாய் நமக்கு வெளியே ஓர் உலகம் காத்திருக்கின்றது. இந்த சூழலை வென்று நாம் எழவேண்டும். நம்பிக்கை வரண்ட இப்பாலைப்வனத்தினுள்ளும் நம்பிக்கையின் விளக்கை ஏந்திய சிறுபுல்லாய் துளிர்விடவேண்டும்.

வரையறைகளுக்கு வெளியே சிந்தித்து தமது உலகங்களை விரித்தவர்களால் தான் அதிசயிக்கதக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. வரலாற்றில் மிக உன்னிப்பாக அவதானித்தால் சில தனிநபர்களது முயற்சிகள் மட்டுமே சமூகங்களினதும் கொள்கை, கோட்பாடு களினதும் வீழ்ச்சியை பலநூற்றாண்டு களுக்குப் பிற்போட்டிருப்பதை உணர முடியும். இது எளிதில் புறக்கணிக்கக் கூடிய விடயமா?

நமது எல்லைகளுக்கு வெளியே உள்ள உலகம் கற்பனைகளின் உலகம் என்ற சிந்தனைப்போக்கு நமக்குள் ஆழமாக வேரூன்றியிருக்கின்றது. காலவோட்டத்தினூடே அள்ளுண்டு செல்லும் சருகுகளாய் நாமும் அலைக்கழிவ தெனில் இந்த மண்ணில் நாம் மனிதராய் வாழுவதில் அர்த்தமில்லை.

நமக்குள்ளே உன்னதமான நோக்கங்கள் இருக்க வேண்டும். உலகம் எங்கும் வியாபித்த சிந்தனை நமக்கு வேண்டும் நமது கருத்துக்களை கவனத்தில் எடுக்கின்ற, அறிவுபூர்வமான நியாயங்களுக்காக நம்மோடு முரண்படு கின்ற மனிதர்கள்தான் நமக்குத் தேவை. இந்த மனித உள்ளங்களை சம்பாதிக்கும் பணியிலேனும் நமது வாழ்க்கை முடிந்து போனால் அதுவும் ஒரு வகையில் திருப்திதான்.
இலங்கை முஸ்லிம் சமூகத்தை எந்தத் திசைகளில் நோக்கினாலும் செய்யப்பட நிறையப் பணிகள் உள்ளன. ஆனால் இந்த பணிகளைச் செய்வதற்குப் பெருமளவில் யாரும் முன்வருகிறார்கள் இல்லையென்ற ஏக்கமும் சோர்வும் நமக்கு ஏற்படவே செய்கிறது. ஆயினும் இதைப்பற்றிச் சிந்திப்பதற்காயினும் சில மனிதர்கள் இருக்கின்றனர் என்பதே ஒரு ஆறுதலான செய்திதான்.

நமது சமூகத்தினுள்ளே ஊடுபாவி நிற்கும் இடைவெளிகளை நிரப்ப எந்த தேவதூதரும் வானத்திலிருந்து வந்து குதிக்கப்போவதில்லை. நாம்தான் செயற்படவேண்டும். செயல், செயலொன்றே நமக்குத் தேவை. இளமைக்கேயுரிய வேகமும், முதுமைக்குரிய பக்குவமும் கலந்த ஒரு கலவையைத் தேடித்தேடியே நாம் பயணிப்போம் இந்த தேசத்தின் எந்த மூலையிலேனும் போராடுவதற்கான மனிதர்கள் காத்திருப்பார்கள். அவர்களது முகங்களில் படிந்திருக்கின்ற தூசுகளை நாம்தான் தட்டிவிடவேண்டும். அவர்களில் படிந்து போயிருக்கும் புழுதி மண்டலங்களைஅகற்றும் துடைப் பான்கள் நம்மிடமே உள்ளன.

நமக்கு முன்னே எழுப்பப்பட்டிருக்கும் கேள்விகளே நமக்கு மகிழ்ச்சி தருவது தான். ஏனெனில் எந்த சமூகத்தில் கேள்விகள் கேட்கப்படுகின்றனவோ அந்த சமூகம் சிந்திக்கத் தொடங்கி யிருக்கிறது என்று அர்த்தம். கேள்விகள் கேட்கப்படுவதன் மூலம்தான் நாம் பதில்களைத் தேட நிர்ப்பந்திக்கப் படுவோம். அந்த வகையில் நமக் குள்ளும் கேள்விகள் எழுப்பப்படுவது மனதுக்குப் பெரும் ஆறுதலாக இருக்கின்றது.

பிரதி மாதந்தோறும்
பெண்களின் கஷ்ட காலங்களில்
என் ஆண்மைக்குத்
துண்டு விழும்.

பதிலீடுகளைப் பகர்வதற்கு
கறுப்பு சந்தைகளில்
உறுதியான உத்தரவாதமில்லை.

என் தேவையை விடவும்
உன் ஆரோக்கியம்
நெடுவாழ்வுப் பயனுடையது.

போர்வை வேலிக்கு மறுகரையில்
நீ கரைவாய்.
மூன்றாவது சாம முன்னிரவில்
நான் விழிவேன்.

அலுவலகத்தில்
மேசைகளோடு தலை உறங்கும்.
உன் கை பிசையாத மாவில்
எப்படி ருசிவரும் ?


கால்வயிறோடு காலை கடக்கும்
பாதி வயிறோடு பகல் பொழுது
அல்சர் பயத்தோடு.

இரவில்
எதிர்பார்த்ததையும் சேர்த்து
முழுமையாக ஈடு செய்வாய்
இப்படித்தான் குறுகிய இரவுகளில்
வயிறு முட்ட முட்ட ......
மேல் மிச்சமாக ......

அதீக் ஹாஸன்



# பெண் - அழுத்தம்
## ஒரு சமூகப் பார்வை



சுமீரா

ஒரு புதிய நூற்றாண்டு புலர்ந்து விட்டது. இன்னும் ஒரு இனிய பொழுதொன்றாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் இந்தவேளையில், இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட சிந்தனைப் புரட்சிகளும், அதன் மூலமான கண்டுபிடிப்புக்களும், அதன் எதிர்விளைவுகளான புதிய பாய்ச்சல்களும் வரலாற்றிலே பல நவீனத்துவமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இவற்றையெல்லாம் அடியாகக் கொண்டு பல்வேறுபட்ட விளக்கங்களை உள்வாங்கி வளர்ந்து புதிய பரிமாணத்துடன் அது மனிதனது சிந்தனைக்குள் ஊடுருவி அதன் செயற்பாட்டுத் த ளத்தினை அகலமாக்கிக் கொண்டு வருகிறது.


இந்தவகையில் தோன்றிய சிந்தனைகளுள் பெண்களின் சுயம் சார்ந்த இருப்பைக் குறிக்கின்ற பல முன்னேற்றத் திட்டங்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை இக்காலப்பகுதிக்குள் கண்டு வருவது கண்கூடு. இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில் பெண் நிலை சம்பந்தப்பட்ட பல்வேறுபட்ட எழுச்சியின் குரல்களும், அதன் உயர்ச்சிக்கான கைகோர்த்தலும் பல்திக்குகளிலும் பரவலாகவே வளர்ந்துகொண்டு வருகின்ற அதேவேளை, அதற்கான கருத்துரைகளும் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. ‘‘பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமையைப் பெற்றுத்தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்.’’ என சார்ள்ஸ் பன்சும், ‘‘பெண்மியம் உலகையே மாற்றியமைக்கும் இயக்கமாகும்’’ என நெரிசா பிளிங்கடனும் குறிப்பிட்டிருப்பது ஒரு புதிய விடியலுக்கான அறிகுறி என்றே எண்ணத் தோன்றுகிறது. மேலைத்தேய நாடுகளில் தொடங்கிய இப்பெண்நிலைவாத சிந்தனையின் வேகம் எமது சமுதாயத்தின் சூழலை வந்தடைந்ததில் கால தாமதம் ஏற்பட்டாலும், தற்காலத்து சூழ்நிலையில் அதன் மலர்ச்சி சற்று வளர்ந்து கொண்டே வருகின்றது.

மனிதர்களின் தனித்துவமான செயற்பாடுகள் ஒவ்வொன்றும் அவர்களது சூழலின் நடைப்போக்குகளை மாற்றியமைத்துக் கொண்டு வருகின்றது. இந்த அடிப்படையில் பெண்கள் பல்தனித்துவங்களைக் (Multiple identity) கொண்டிருக்கின்றனர். சாதியம் தொழில் நிலை, தேசியம், வகுப்பு போன்ற அடையாளங்கள் காலத்துக் காலம் சமூக பொருளாதார, அரசியல் பின்னனியிலும், அதன் புலங்களின் தொடர்ச்சியான மாற்றத்துக்கு உள்ளாகி வருகிறது.

ஆரம்ப காலம் முதல் பல்வேறு வாழ்க்கைச் சுய நோக்கங்கள் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும், தம்விருப்புக்களைக் பூர்த்தி செய்து கொள்வதற்காகவும் தன்னிலை சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்காக பலவகைகளிலும் எத்தனையோ பெண்கள் தனக்கு உடன்பாடில்லாத விடயங்களுக்காக வலியுறுத்தப்பட்டு அடிபணிய வைக்கப்படுகின்றனர். இன்றைய சூழலில் ஒரு குழுவினது தேவை, ஆர்வம் என்பவற்றினை நிறைவு செய்து கொள்வதற்காக தனக்கு விருப்பமில்லாத ஒன்றை வெளிக்காட்டவும் அதே வேளை தனது



தனித்துவத்தை இழக்கவும் நேரிடுகிறது. இந்நிலமை வாழ்க்கையில் எத்தனையோ கனவுகளையும், கற்பனைகளையும் சுமந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் இவையெல்லாம் தம்மை ரணப்படுத்திய போதும், அதன் காயங்களைச் சுமந்து ஊமையாய் நிற்கின்றனர். இதனை யாதார்த்த ரீதியில் உலகில் பல்வேறுபட்ட நிகழ்களினூடே நாம் கண்டு கொள்ள முடிகின்றது. இன்றைய சினிமா உலகு கற்பென்றும், ஒழுக்கமென்றும் பண்பாட்டுச் சுமைகளை பெண்கள் மீது சுமத்துவதிலும், அதனைப் பாதுகாப்பதிலும் கரிசனை காட்டும் அதே வேளை, மறுபுறத்தில் பெண்களைப் போகப் பொருளாகவும், நுகர்வுப் பண்டமாகவும் மாற்றி சமூகத்தில் மறைந்திருக்கின்ற வக்கரிப்புக்குத் தீனி போடுகிறது. இதற்குக் காரணம் சினிமாத்துறையில் காணப்படும் ஆணாதிக்கத்தின் மிகைத் தன்மையே எனலாம்.



பெண்களிடம் காணப்படுகின்ற பொறுமை, தியாகம், அடக்கம், அமைதியான இயல்பு எனும் பண்பட்ட குணங்கள் அவர்களது மனத்தின் வெளிக்காட்டல்களாகவே அமைந்துள்ளன. இது பலவீனத்தின் வெளிக்காட்டலல்ல. பேராற்றலின் வெளிக்காட்டலாகும். இவை தெய்வீகத் தன்மை பொருந்தியவை. பெண்கள் பணிவுடன் இருக்கக் காரணம் அவர்களுக்கு வாய்க்கப்பெற்ற அனுபவ முயற்சியும், மற்றவர் திறன்களையும், உணர்வுகளையும் மதித்தலுமேயன்றிப் பயத்தினை வெளிக்காட்டுவதல்ல. இதனைப் புரிந்து கொள்ளாமல் அவர்களது குணங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதும், அதனை இழிவு படுத்த நினைப்பதும் ஆணாதிக்கத்தின் உயர்ந்த படித்தரங்களாக கணிக்கப்படுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் காணப்படும் பல்வேறு உபதேசங்கள் பெண்களின் உணர்வுகளையும், அவர்களது முயற்சிகளையும் முளையிலேயே கிள்ளிவிடும் வகையில் அமையப்பெற்றுள்ளன. ஒரு பெண்ணை அவளது சுயவிருப்புக்கு ஏற்ப நடக்கவிடாது வைத்திருக்க இன்னொரு பெண்ணே வேலிதாண்டிவருவது விலக்க முடியாத வியாதியாகிவிட்டது. ‘‘எதிர்த்துப் பேசாதே’’ ‘‘அடக்கமாய் இரு’’ ‘‘பின்தூங்கி முன்எழு’’ ‘‘துள்ளாதே’’ என்றும், பாடசாலையில் செந்தமிழைக்கற்பிக்கும் முன்னமேயே ‘‘தெய்வம் தொழாள் கொழுநன் தொழுவாள் பெய் எனப்பெய்யும் மழை’’ என்று கூறி, சீதையையும், கண்ணகியையும் மாதிரி உருவகங்களாக முன்வைத்தும் சொல்லும் போதனை முறைகளும் பெண்ணுக்கு ஒரு வகை அடிமை நிலையையும்,

ஆணுக்கு ஆண்டான் என்ற மனோநிலைமையும் ஏற்படுத்துகின்றது. இவற்றை ஏற்று வளர்ந்து விட்ட ஆணும் பெண்ணும் வெவ்வேறு எதிர்பார்ப்புக்களை முன்வைத்து குடும்பத்துள் சங்கமிக்கவும், பெண்ணடிமைத்தனத்தை தொடரவும், ஆணாதிக்கத்தினை மேலோங்கச் செய்யவும் வழி ஏற்படுகிறது. இது அடுத்த தலை முறையிலும் ''பழைய குருடி கதவைத் திறவடி'' என்ற கதையாகவே தொடரப் போகின்றது.

சமூகத்துள் மாற்றங்களை விரும்பாத ஒரு சாராரால் முன்வைக்கப்பட்ட வாதங்கள் பெண்களைக் குறியீடாக வைத்து அவர்களைக் கட்டுப்பாட்டில் வைக்க முயல்கின்றது. இந்த வகையில் இதனை மீறும் பெண்களும், எதிர்வாதம் செய்யும் பெண்களும், தன்விருப்பப்படி மணாளனைத் தெரிவு செய்யும் பெண்களும், சுயதேவைகளை பூர்த்தி செய்ய தொழில் புரியும் பெண்களும் எப்போதும் சமுதாய மதிப்பினில் குறைத்தே மதிப்பிடப்பட்டு வந்திருக்கின்றனர். அவர்கள் அடங்காப் பிடாரிகளாக இருப்பவர்கள் என்ற பட்டத்தினை மிக எளிதாகப் பெற்றுக் கொள்கின்றனர். இதனைத் தவிர்க்கவே பெண்கள் தன் சுயவிபரங்களை வெளியிடாமலும், மறைத்தும் நல்ல பெண்மணிப்பட்டம் பெறுவதற்கு எத்தனிக்கின்றார்கள். போதனை முறைகள் இதற்குத் தொடர்ந்து மக்கள் சார்பு வழங்குகின்றது என்றே கூறலாம்.

சமூகத்துள் அதிகாரம் கொண்டவர்கள் பெண்கள் மீது வன்முறைப்பாங்கான முறையிலும், அராஜக முறையிலும் செயற்பட முனைவதால் தமது அபிப்பிராயங்களை வெளிப்படுத்தப் பயந்து தாமாகவே தம்மைக் கட்டுப்படுத்தி ஆமை ஓட்டுக்குள் தலையை இழுத்துக் கொள்வதுபோல அமைதியாக இருந்து விடுகின்றனர். இவர்கள் தமது நனவோட்டங்களை, நோக்குகளை, சிந்தனைகளையெல்லாம் தமக்குள் புதைத்து ஒரு சிறிய வட்டத்துக்குள் தம்மை அடக்கிக் கொள்கின்றனர். இவ்வகையான சுயசிந்தனையற்ற, அடுப்பங்கரைகளையே தன்னுலகமாகச் சுருக்கிக் கொண்டுள்ள எத்தனையோ பெண்களை இன்றைய சமூகத்தில் காணமுடிகிறது. அவ்வடுப்பங்கரையான பெண்களே ஆணின் உயர்ச்சியின் ஏணிப்படிகளாய் இருந்துள்ளனர் எனும் வரலாற்றினை சற்றுத் திரும்பிப் பார்க்க மறந்து நிற்பது வருந்தக் கூடிய விடயம். கண்ணியத்துடன் வாழ்வதற்கான வேட்கை, ஆத்ம கௌரவம் போன்ற தனது சுயங்களை இழந்து உயிர் பிழைத்தலுக்காக அடிபணியும் நிலை இன்றைய பெண்ணியச் சூழலில் காணப்படுகிறது. கலாச்சாரத்தின் முன்னிலையில் விதவைகளான பெண்கள் அபசகுணத்தவர்களாக கணிக்கப்படுவதும், அதே நேரம் மறுமணம் செய்துகொள்ள அவள் முனையும் போது அவளைக் கைப்பிடிக்கும் ஆணைப்பற்றி பரிதாபப்படுவதும் இங்கு நிதர்சனமான உண்மையாக உள்ளது. இவ்வாறு சமூகமானது பெண்களைப் புறம்பான வகையில் நோக்குவதும், அவர்களுக்கென்று ஒரு அந்தஸ்துச் சட்டத்தினை அவர்களது கழுத்திலே மாட்டி அதன்படி இயங்கப் பணிப்பதும், அதன்படி அவளது செயல்அமைய வேண்டும் என எதிர்பார்ப்பதும் அன்று முதலே இருந்து



வருகின்றது. "Sleeping with the enemy" என்று அண்மையில் வெளிவந்துள்ள திரைப்படம் கணவன் - மனைவியிடையேயான முரண்பாடுகளை தத்ரூபமாக சித்திரிக்கும் அதேவேளை, அவள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் என்பவற்றையும் விளங்கி நிற்கின்றது. இச்சூழலில் நம்சமூகத்தின் உயிர்ப்பான சடங்குக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்களில் ஒருவளாக அவளைச் சித்தரிக்க முடியும் வேளை, 'ஏன் தன்னால் கணவனுக்காக விட்டுக் கொடுக்க முடியாது?' என்றே சிந்திப்பாள். இங்கு நாம் யாதார்த்த பூர்வமாக அவளது அபிலாசைகளையும், உணர்வுகளையும் புரியவைக்கின்றோம்.



அன்றாட வேலைகள், வாழ்க்கை உழல்வுகள், அவநம்பிக்கைகளுடன் போராடும் ஒரு பெண் தனக்கு பிடிக்காத ஒருவருடன் சேர்ந்து வாழ்வது என்பது உண்மையிலேயே முடியாத ஒரு காரியமாகும். ஒவ்வொரு சிறிய பொருளை வழங்குவதிலும் தேர்ந்தெடுப்பதிலும் எமது விருப்பினை வெளிப்படுத்தும் நாம் ''ஒன்றாக இருக்க முடியாது'' என்ற நிலையில் அந்நபருடன் சகித்துக்கொண்டு உலகத்திற்காகவும், வறட்டு கௌரவத்திற்காகவும் தம்மைத்தாமே உருக்கி அழிக்கும் பேதைகளை சற்றுக் கண்கொண்டு பார்க்கவேண்டும். இத்தகைய சூழல் ஒவ்வொரு இடங்களிலும் காணப்படுகின்றது பெண்களின் விருப்பத் தேர்வுகள் பல இடங்களில் மறுக்கப்பட்டு வருகின்றது. ஒரு கருத்தியலைக் சார்ந்திருப்பதில் இருந்து தனது தனித்துவ அடையாளத்தையும் நடத்தையையும் தீர்மானிப்பதற்கான சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. சில இடங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவர்களால் சிலவை தீர்மானிக்கப்படுகின்றது என்பதனை மறுக்கவும் முடியாது.

பெண்கள் சமத்துவமான வாழ்விற்கு மிகத் தடைகளாக காணப்படுகின்ற சட்ட , நீதி நியமங்களுக்கு அப்பால் தங்களின் அகவுணர்ச்சிச் சிக்கல்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். வெளிப்பார்வைக்கு கலாச்சாரமானது மக்களின் விழுமியங்களை வெளிப்படுத்தும் அம்சமாக இருப்பினும் நடைமுறையில் மேற்படி சித்தாந்தங்கள் ஏதோ ஒரு சுயநோக்குக்காக கையாளப்பட்டு வருகின்றதைக் காணமுடிகின்றது. எனவே இத்தகைய நிலையில் மாற்றம் பெறவும், பெண்களின் வாழ்வு நிலையில் ஏற்றம் காணவும் அவர்கள் தங்களுக்குள் தன்னம்பிக்கையடிப்படையான தீர்மானங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும் அத்தோடு சமூகம் மனந்திறந்து அவர்கள் நோக்கங்களை நோகடிக்காத நல்நோக்குக்கு வழிகாட்ட வேண்டும். இதுவே ஒரு புதிய உதயத்துக்கும் சமூதாயத்துக்கும் வழிகோலும்.






பெரியம்மா பற்றிய ஞாபகங்களை எவ்விடம் தொட்டுத் தொடங்குவதென்று இன்னும் புரிந்த பாடில்லை. துண்டு துண்டாகத்தான் அவரது முகம் வந்து போய்க் கொண்டிருந்தது. வெளிறிய முகத்தில் மின்னும் மூக்குத்தி மட்டும் நினைவில் உறைந்து துருத்திக் கொண்டிருக்கிறது. கடைசியாய்ப் பார்த்து ஐந்தாறு வருடமிருக்கும். வீட்டுக்கு வந்து கொஞ்ச நாள் தங்கிவிட்டு சனத்தையெல்லாம் கூட்டி, பேயாட்டம் ஆடி, ஊராரை புதினம் பார்க்க வைத்துவிட்டுச் சென்றதன் பின்பு இன்று கல்முனையிலிருந்து ஊர்திரும்பும் பஸ்ஸில் அவரைக் காணக் கிடைத்திருக்கின்றது.

பிடிமானங்களோடு பஸ்ஸில் தொங்கிக் கொண்டிருந்த நான், யதேச்சையாக த் திரும்பும் போதுதான் பெரியம்மாவின் ஆச்சரிய முகத்தில் விழிக்கக் கிடைத்தது. முழு முக்காட்டையும், எங்கேயோ வெறித்துக் கொண்டிருந்த பார்வைகளையும் தளர்த்தித்தான் பெரியம்மாவும் என்னை அடையாளம் கண்டிருக்கவேண்டும். எதையும் பேசமுடியாதவளவிற்கு பெரியம்மா மீதான கோபாவேசம் எனக்குள் ஒளிந்திருப்பதை காட்டிக் கொள்ளாமல் மெல்லிதாய் புன்னகைக்க முயன்ற நான் மெதுமெதுவாய்த் தோற்றுக் கொண்டிருந்தேன். மனம் - பாறையாய் உள்ளே சமைந்து கொண்டிருந்தது. பிரக்ஞையற்ற எனது முகத்தை உற்றுநோக்கிக் கொண்டிருந்த பெரியம்மா, அதிர்வுற்று வீசிய காற்றின் வேகத்தால் முந்தானையை இழுத்து நன்றாக முக்காடிட்டார். வீதியின் இருமருங்கிலும் வேளாண்மை வெட்டிய பின் எஞ்சியிருந்த ஒட்டிகள் மேல்க் காற்றுக்கு அலைக்கழிபட்டு பஸ்ஸினுள் நிறையத் தொடங்கிற்று. கண்ணாடிகளை அடைப்பதற்குக் கூட திராணியற்று சும்மாவே அமர்ந்திருந்தார். குற்றவுணர்வுள்ள பெண் நிலத்தை வெறித்திருத்திருப்பதை போல அவரது தலை குனிந்திருந்தது.

பஸ் ஊர் போய் சேர ஒரு மணித்தியாலயம் முழுதாய் வேண்டியிருந்தது. எதிர்கொள்கின்ற ஒவ்வொரு வினாடியும் பெரியம்மா பற்றிய ஞாபகங்களுடன் கழியப்போவதை நினைத்து மனதுக்குள் அரிப்பெடுத்தது. வேகமாக ஓடிவந்த மரங்களும், மின்சாரக்கட்டைகளும் பஸ்ஸில் மோதுவன போன்று மாயாஜாலம் காட்டி கழிந்து மறைந்தன. உடைந்து போன பெரியம்மாவின் சித்திரம் ஒரு இலக்கை நோக்கிய புள்ளியாய் தூரத்தில் குவிந்தன.

பெரியம்மா என்றதொரு பெண்ணின் நினைவுகள் சிறுவயதுமுதலே ஒரு நோய் போல என்னுடன் ஒட்டிக் கொண்டு விட்டது. நான் கேள்விப்பட்ட பெரியம்மா சூர்ப்பனகை போன்று அரக்கத்தனத்துடன் என் முன்னே விரிந்துகிடந்தாள். ஆலமரத்தின் விழுதுகள் போல அவள் பற்றிய நீண்ட கதைகள் ஞாபகத்தட்டில் நிறைந்தன.

ஏழு பேர் கொண்ட குடும்பத்தில் பெரியம்மாதான் மூத்தவள். தாயிலும், தந்தையிலும் இல்லாத சாயல் எங்கிருந்தோ வந்து அவளோடு ஒட்டிக்கொண்டதாகத்தான் அனைவரும் பேசிக் கொண்டார்கள். இளவயதிலே தன் தாயை தின்று தீர்த்தவள் என்ற பட்டத்தை சுமந்து கொண்டுதான் வாழ்க்கை சுமையை ஏற்க அவள் தலைபட்டாள். எதற்கும் லாயக்கற்ற தனது தந்தை, அபின் உருண்டைகளிடம் தஞ்சமடைந்து காசை கறுப்பாய் கரைத்துக் குடிக்கும் தத்துவத்தை எதிர்த்து நின்று போராடினாள். தன் கடைசித் தம்பியை கக்கத்தில் இடுக்கிக் கொண்டு உறவினர்களின் படியேறிய போதெல்லாம்

புறக்கணிக்கப்பட்டாள். அருகிலிருக்கும் சந்தைக்கு சென்று பிச்சை வாங்கி வரும் படி தன் சகோதரம்களை துன்புறுத்தினாள்.

காலப் போக்கில் வயிறு பெருத்த வள்ளியாக பெரியம்மா மிளிர்ந்தாள் என்பது எந்தளவு உண்மையோ அந்தளவிற்கு எனது தாயும் மற்றவர்களும் மெலிந்து போக தலைப்பட்டார்கள். பானையில் சோறாக்கி மற்றவர்களுக்கு கிள்ளி வைத்துவிட்டு முழுச்சோற்றையும் தின்று தீர்க்கும் ஆக்ரோசத்தினால் பெரியம்மா தன் பசியை நியாயப்படுத்தி இருக்கிறாள். தந்தையின் சேட்டுக்குள் காசு களவெடுக்கும் திணவும், கள்ளத்தீன் வாங்கித் தின்னும் ஆர்வமும் பெரியம்மாவின் இளமை வாழ்க்கையை முழுக்கவே ஆக்கிரமித்திருக்கின்றன.

இவ்வகையான கதைகள் என்னுள் நிரம்பும்போது உருவமற்ற பிரதிவிம்பமாக மனக்கண் முன்னே ஆடும் பேய், பிசாசுகள் போல பெரியம்மாவின் சாகசங்களை அறிய நான் அவாவுற்றேன். என் தாய்சொல்லும் ஒவ்வொரு கதையிலும் ஏதோ ஒரு கொடுமைக்காரப் பாத்திரத்தை பெரியம்மா சுமந்து வந்தார். அப்போதெல்லாம் சூரத்தனமும், ராங்கித்தனமும் நிறைந்த ஒரு ஆம்பளக் கஸ்ஸாவை பெரியம்மாவாக கற்பனை பண்ணவேண்டியிருந்தது. அழுக்குருவின் மொத்த வடிவம் பெரியம்மாவாக வீச்சமடித்து என் கற்பனை முழுக்க நிறைந்தது.

எல்லோரையும் போல நானுமொரு பெரியம்மாவை பெற்றிருக்கிறேன் என்று கூறமுடியாதவளவிற்கு மனதளவில் நோய் வாய்ப்பட்டிருந்தேன். என் வயதையொத்தவர்கள் சொல்லும் கதைகளில் , பருத்துக் கன்னங்கள் செறிவான, கைகளில் தங்கக் காப்பணிந்த, வெற்றிலை எச்சில் அப்ப முத்தமிடுகின்ற பெரியம்மாக்கள் வந்தபோது எனது கதைகளில் மட்டும் அவள் கொடுமைக்காரியாகவும், செத்துப்போனவளாகவும் காட்சி தந்தாள்.

என் தாய் பற்றிய மனப்பதிவுகளில் இருந்து அகங்காரமும், புறக்கனிப்பும், நிறைந்த பெரியம்மாவைத்தான் என்னால் தரிசிக்க முடிந்தது. ஒரு பக்க நியாயங்களை ஏற்றுக் கொண்டு பெரியம்மாவை மறுதலித்தேன் என்றால் கூடிய சீக்கிரமே பெரியம்மா விடயத்தில் துரதிஷ்டசாலியானேன் என்பதுதானே பொருள். ஆனால் நிஜத்தின் கசப்பான வடிவம் கூட அதுவாகத்தானே இருந்தது.

திடீரென பிரேக்பிடித்து அதிர்ந்தது பஸ். அருகில் நின்றவன் என்மீது ஒரு கணம் மோதி எழுந்தான். அவன் வியர்வையின் வீச்சம் நாசியின் அடியில் தேங்கி உறைய ஆரம்பித்தது. முகத்தைத் திருப்பி ஜன்னலுக்கப்பால் வெளியே பார்த்தேன். நீண்ட சுவர் வெள்ளையும் சிவப்பும் கலந்தான தனித்தனி வர்ணங்களில் செங்குத்தாக பூசிவிடப்பட்டிருந்தது. காரைதீவுக் கோயிலின் மேற்தூபி கட்டப்படாமல் கிடுகு கொண்டு மறைக்கப்பட்டிருந்தது. செக் பொயின்டில் அனைவரையும் இறங்கி நடக்கும் படி கண்டக்டரும், ரைவரும் ஆளாலுக்கு கத்திக்கொண்டிருந்தார்கள். முன்னாலுள்ள சீற்றின் வளைந்த கம்பிகளைப்பிடித்தபடி எதிரே வெறித்துக் கொண்டிருந்தார் பெரியம்மா. கையில் கயிறு சுற்றியது போல் தங்கக் காப்புகள் நிறைந்திருந்தன. பையைத்துளாவி அடையாள அட்டையை நிச்சயப்படுத்திக் கொண்டு பஸ்ஸிலிருந்து இறங்கினேன்.





மீண்டும் பஸ்ஸில் ஏறியபோது அதிஷ்டவசமாக அமர்வதற்கு ஒரு சீற் கிடைத்தது. பெரியம்மாவின் தலையை அருகில் நின்ற தொந்தி வயிறு மறைத்துக் கொண்டிருந்தது. பஸ் வேகமெடுத்தபோது கடந்த காலங்கள் நிலத்தினடியில் நழுவத் தொடங்கின.

வாப்பா உம்மாவை திருமணம் செய்தவுடன் தனது வீட்டுக்கே கூட்டிவந்து விட்டார். வருடத்துக்கு ஒன்றோ இரண்டோ தடவைதான் உம்மாவுக்கு தன் ஊரைப் போய்ப்பாக்க வாய்ப்புக் கிடைத்தது.

அப்படியான சந்தர்ப்பங்களில் பஸ்ஸின் வலது பக்கத்தில் எப்படியாவது அடம்பிடித்து இருந்து கொள்வேன். நாற்பதாம் கட்டை தாண்டியவுடன் வரிசை தவறாமல் நட்டி வைக்கப்பட்டிருக்கும் தென்னை மரங்கள், கண்ணுக்கெட்டும் தூரம் வரை நிழல் பரப்பி நீண்டு கிடக்கும். நானே பஸ்ஸை ஓட்டுவதான பிரமை. நெஞ்சை யாரோ கையிலேந்தி வைத்திருப்தான சிலிர்ப்பு. செக் பொயின்ட் தாண்டி ஊறணிக்குளம் வந்தவுடன் ஜன்னல்களுக்கு வெளியே தலை எம்பிக் குதிக்கும். பச்சை படர்ந்த குளக்கரையில் ஒற்றைக்காலில் கொக்குகள் பூத்திருந்தால் பெரியம்மாவை சந்திக்கலாம் என்பது என் ஐதீகம்.

உம்மாவின் ஊருக்கு நான் பயணிக்கும் போதெல்லாம் தன் உறவினர்களின் வீடுகளுக்கு என்னை தவறாமல் அழைத்துச் செல்வார். அங்கு வைத்து பெரியம்மா பற்றி அவர் எதுவுமே கூறுவதில்லை. எனக்கொரு பெரியம்மா இருக்கின்றதென்ற உண்மையை மனதுக்குள் அடக்கி அவர் பற்றிய பூர்வீகத்தை அறிய பேரவா கொண்டேன். அவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஒவ்வொரு முறையும் கைநழுவிப்போகவே பெருத்த ஏமாற்றத்தோடுதான் ஊர் திரும்ப வேண்டியிருந்தது.

ஒரு நாள் உம்மாவும், அவரது கடைசித் தங்கையும் பேசிக் கொண்டிருந்த பேச்சிலிருந்து என் பெரியம்மா குடும்பத்தை எதிர்த்து சொத்தைப் பிரித்துக் கேட்டதாகவும், ஒரு கள்ளனுக்கு வாழ்க்கைப் பட்டதாகவும், தற்போது ஊருக்கு தூரத்தே இருக்கும் காட்டில் வசித்து வருவதாகவும் கேட்டு அதிர்ச்சியுற்றேன். பெரியம்மாவுக்கு ஒரு பெண் குழந்தை இருக்கின்றதென்ற விடயம் இன்னும் என்னுள் ஆர்வத்தை தூண்டிவிட்டது. நான் கதையை உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருக்கின்றேன். என்ற யூகத்தில் உம்மா கதையை பாதியில் நிறுத்திவிட்டார். உம்மாவின் மீது வெறுப்பு வெறுப்பாக வந்தது.

அதற்குப்பின் பெரியம்மாவை நான் முழுமையாகக் கண்டது என் மாமா ஒருவர் மரணித்த போதுதான். விடியற்காலையில் செய்தி வந்தவுடன் அனைவரும் அங்கு போய்ச் சேர்ந்திருந்தோம். உம்மா அழுதழுது வீங்கிய கன்னத்துடன் சோர்ந்து போய் ஒரு மூலையில் சுயநினைவற்றுக் கிடந்தார். அப்போதுதான் பெரியம்மாவை யாரோ எனக்கு காட்டினார்கள். வாசலில் மண்மூடிவிடப்பட்ட கிணற்றுக் கட்டில் பெரியம்மா அமர்ந்திருந்தார். புடவை முந்தானையை வாய்க்குள் திணித்தபடி விம்மிக் கொண்டிருந்தார். அவரது குழந்தை பக்கத்தில் நின்று அவரைச் சுரண்டியபடி புதினம் பார்த்தது. சோகத்தில் சோர்ந்திருந்த பெரியம்மா அன்று ஏனோ எனக்கு மிக அழகாகத் தோன்றினார். அருகில் போய் நின்றும் அவர் என்னை தெரிந்தவராக காட்டிக் கொள்ளாதது எனக்குள் பெருத்த கவலையை ஏற்படுத்திற்று.

தொடர்ந்த நாலைந்து நாளும் அங்கேயே தங்க வேண்டிய சூழ்நிலை. அதற்குள் எப்படியோ உம்மாவும் பெரியம்மாவும் நெருக்கமாக பழக ஆரம்பித்திருந்தார்கள். ஆனால், எதிர்பாராத விதமாக நாங்கள் ஊர் திரும்புமன்று நடந்த வாக்குவாதமொன்றின் உம்மாவும் பெரியம்மாவும் கத்திக் கூச்சலிட்டனர். இங்கிருந்து உம்மா எப்படிச் சென்றாரோ அதே கோலத்துடன்தான் திரும்பி வர நேர்ந்தது. வாப்பா எதையும் பேசாமல் மௌனமாக இருந்து விட்டார். ஏதோ உம்மா சண்டையில் தோற்றுவிட்டதாக நான் கவலைப்பட்டேன்.

உம்மா இனி தன் ஊருக்குப் போவதில்லை என சபதமெடுத்திருந்தார்.அவளின் மௌத்துக்குக் கூட போகக் கூடாதென்று அடிக்கடி கூறிக் கொள்வார். இதற்கிடையில் பெரியம்மா தன் கணவனை பிரிந்து விட்டதாகவும், வெளிநாடு போய்விட்டதாகவும் செய்தி வந்தது. பெரியம்மாவுக்கு கிடைத்த சுகபோக வாழ்வைப்பற்றி இப்போது உம்மா திடீர் திடீரென பேசஎத்தனித்தார். கடைசியில் அவள் கட்டின புருசனையே வெரட்டின அகங்காரிதானே என்று முடித்தார். உம்மா பெரியம்மாவின் கதையை தொடங்கும்போது அதன் இறுதி முடிவை மிக சுலபமாக நான் யூகித்துக் கொள்ளத் தொடங்கினேன்.
ஏழெட்டு வருடங்களைக் கடந்த பின்பு, பெரியம்மா பற்றிய ஞாபகங்களெல்லாம்



மண்மூடிக்கிடந்த ஒரு மாலைப்பொழுதில் எங்கள் முற்றத்தில் அவரின் நிழல் விழுந்தது. அனைவரும் ஆச்சரியத்துடன் பெரியம்மாவை சூழ்ந்து கொண்டோம். என் உம்மாவை விட இளமையாக இருந்தார் அவர். தலையில் ஒரு முடிகூட நரைத்துப் போயிருக்கவில்லை. வெள்ளையுடன் மஞ்சல் கலந்த முகத்தில் ஒளிப்பிரவாகம் வழிந்தோடுவது போலிருந்தது. கண்படாமல் சொருகியது போல மூக்குத்தி மினுமினுத்தது.

உம்மா பழைய பகைமை எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சியுடன் இருந்தார். வாப்பாவிடம் விதவிதமான கறிகளை வாங்கி அனுப்புமாறு நச்சரித்து, தினமும் பெரியம்மாவுக்கு ஆக்கிக் கொட்டினார். இவையெல்லாம் அதிக சந்தோசத்தை எனக்குள் ஏனோ ஏற்படுத்தவில்லை. பெரிய சண்டையொன்றை நான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

வீடு முழுக்க வெளிநாட்டு மணம் பரவ ஆரம்பித்திருந்தது. சிவப்புக் கரைகளை யுடைய ஒரு மஞ்சல் புடவையை பெரியம்மா உம்மாவுக்கு கொடுத்திருந்தார். தன் கழுத்தில் கிடந்த இரண்டு தங்க மாலைகளையும் என் தங்கைகள் இருவருக்கும் அணிவித்திருந்தார். ஐந்தாவது நாள் தான் ஊருக்கு புறப்படப் போவதாகவும், அங்கே நிறைய வெளிநாட்டு பொருட்கள் இருப்பதாகவும், அவற்றை அனுப்பி வைப்பதாகவும் கூறி என் தங்கைகள் இருவரையும் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றிருந்தார்.

உம்மா பெரியம்மாவின் புகழ்பாடிக்கொண்டு மகள்மாரின் வரவை எதிர்பாத்துக் கிடந்தார். மூன்றாம் நாள் கண்ணீரும், கம்பலையுமாக தங்கைகள் ஊர் வந்து சேர்ந்ததை கண்டதும் உம்மா ஓவென்று அழத்தொடங்கினார். கழுத்தில் கிடந்த மாலைகளை களற்றி எடுத்துவிட்டு தன் மகள் பாவித்த பழைய சட்டைகள் ஓரிரண்டை தங்கைகளிடம் கொடுத்தனுப்பியிருந்தார் பெரியம்மா. அந்நாளே அவள் தனக்குத் தந்த மஞ்சல் புடவையையும், கொடுத்தனுப்பியிருந்த சட்டைகளையும் மூட்டை கட்டி, வந்த பஸ்ஸிலேயே அனுப்பினார் உம்மா.

மறுநாள் பெரியம்மாவின் காலடி எங்கள் வாசலில் பதிந்த போது உள்ளுக்குள் லேசாய் ஆடிப்போனோம். இல்லாத பொய்களையெல்லாம் கட்டி பெரியம்மா கூச்சலிட ஆரம்பித்தார். எங்களின் துரதிஷ்டம் வாப்பா வெளியே சென்றிருந்தார். சனம் கூடி புதினம் பார்க்கத் தொடங்கியது. தூஷண வார்த்தைகளை யெல்லாம் கோர்த்து உம்மாவை திட்டிக் கொண்டிருந்தார் பெரியம்மா. அவரின் முகத்தை பாாப்பதற்கு கூட வெறுப்புற்று உம்மா வீட்டுக்குள் அமர்ந்திருந்தார். ஒரு மணித்தியாலம்வரை தொடர்ந்த ஏச்சுக்குப்பின் திடீரென பெரியம்மா விம்மி விம்மி அழத்தொடங்கினார். எவ்வளவு நேரம் அழுதாரோ தெரியாது. அவர் வீட்டைவிட்டு வெளியேறிய பின்பும் அவ்வழுகைக் குரல் வீடு முழுக்க நிறைந்திருந்தது.

ஜன்னல்களுக்கு வெளியே பட்டினப்பள்ளியின் கோபுரம் தூரத்தில் தெரிந்தது. எழுந்து நின்று மணியை அழுத்தினேன். டயரை அழுத்தி தேய்த்துக் கொண்டுவந்து பிரேக்கிட்டது பஸ். சனத்தை விலக்கி படிகளில் இறங்கும் போது பெரியம்மாவின் பக்கம் திரும்பினேன். புகைமண்டிய அவரது கண்கள் பூரணமாய் பணித்திருந்தது.




காற்றினை புறந்தள்ளி
தெருப்புழுதி கீறியதாய்
புறப்பட்டிருந்தது
கிரீடம் அணிந்த ராஜகுமாரனின்
என் நோக்கியதான
வெண் புரவிப் பயணம்

நான் நன்கே புரிந்தேன்
இனி....
எஞ்சியிருக்கும் என்னுலகம்
தீய்ந்தேபோகும்.

சின்னதாய்....
அடைகாத்து பத்திரப்படுத்திய
என் உள்ளொளி....
என் பிரக்ஞை...
என் மௌனம்...
இத்தனையும்
அவன் வார்த்தை நாசங்களுள்
மூங்கிப்போகும்

என்
தப்பிப் பிழைத்தலுக்கான
அத்தனை சாத்தியப்பாடுகளும்
வழிந்து தீரும்
அவசரத்தில் சிலது
உருக்குலைந்து சிதிலமாகும்

வர்ணமடித்த
அவன் வார்த்தையின் மாயையும்
என் இயலாமையின்
அத்தனை கணுக்களிலும்
அடர்ந்தேறும்

விடுபட்டவை..
சொற்பமான
என் வனமத்திலும்
கிளை ஒடித்து குளிர்காயும்


இதுவல்ல
நான் தேடும் உலகம்
அதை அவன் புரியான்...
அவன் குணங்குறிகாட்டி
என்னை விழத்தி
சகலதுமாய் படர்ந்து
என் நிஷ்டைக் குளத்தை
அசிங்கப்படுத்துவான்
முழு மூச்சாய்...

நிச்சயமாய்
அவனுக்கும்
எனக்குமான போராட்டத்தில்
நான் தோற்றுப்போவேன்
அவனின் அலங்காரத்தை...
அவன் பாசாங்கை...
உண்மையென
முழுவதுமாய் நம்பி

என்னுடைய ரட்சகா!
அவனின் அந்தப்புர
கனவுகளிலிருந்து
என்னைத் தூரப்படுத்து
அல்லது
என் லாகிரியை அழி....
இன்னும்...
கல்லாய்போக
சபி...

# சினிமாவில் குழந்தைகள்







குழந்தைகளின் உலகம் அற்புதமானது. ஆழ்ந்த கவனத்துக்குரியது. அவர்களின் இளமைக்கால ஆளுமைச்செறிவுதான் சில வருடங்களைக் கடந்த பின் ஒரு ஆரோக்கியமான சிறுவனையோ, சிந்தனை தெளிவுள்ள இளைஞனையோ தோற்றுவிக்க வழிகோலுகின்றது.

குழந்தைகள் விடயத்தில் பின்தங்கியதும், நடைமுறைச் சாத்தியமற்றதுமான கோட்பாடுகளும், மரபுவழிப் பார்வைகளும் இன்று அவர்கள் பற்றிய கவனங்களை ஆழ்ந்த கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றன. குழந்தைகள், சிறுவர்களது நலன்கள் எவையெனத் தீர்மானிப்பதில் எமது பார்வைக் கோணமும், அபிலாசைகளும், எமது கனவுகளுமே முக்கியமான பங்காற்றினவே தவிர குழந்தைகளுடனான தொடர்பாடல், உறவு என்பது பற்றிய புரிதல்கள் நீண்ட விவாதத்திற்கு உட்படுத்தப்படுத்தப்படவேண்டியனவாக இருக்கின்றன. இவ்வகையில் சினிமா, திரைப்படங்கள் சார்ந்த தொடர்பாடல் துறைகளில் குழந்தைகளும், சிறுவர்களும் எந்தவளவுக்கு உள்வாங்கப் பட்டிருக்கிறார்கள்; புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறார்கள். என்பதனை ஆராயமுற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அற்புதமான குழந்தைகளின் உலகம் வணிக வியாபாரத் திரைப்படக்கலாச் சாரத்துக்கு மிகத்தூரத்தில் நின்றே உற்றுநோக்கப்பட்டிருக்கிறது. தமிழ் சினிமா உலகைப் பொறுத்தவரை 'காளிதாஸ்' என்ற முதல் பேசும் படம் தொட்டு இதுவரை 5000 ற்கு மேற்பட்ட திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. இவை பொருளாதாரத்தை மையமாகக் கொண்டே தனது வட்டத்தை பேணிக் கொண்டிருப்பதால் யதார்த்தமும், ஆத்மதிருப்தியும் தூர ஒளிந்து கொண்டுள்ளன. காதலைக் கட்டி அழுவதிலும், கலாச்சார மாற்றங்களை ஏற்படுத்துவதிலும் முன்னனியில் நிற்கும் இத்துறையில் நம்பிக்கை தரும் வரவுகள் வந்த வீதம் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

தமிழ்ச் சினிமாக்களில் குழந்தைகளை அவர்களின் இடங்களில் வைத்து நேசித்தவர்களின் எண்ணிக்கை சொற்பமே ஆகும். குடும்பத்தில் ஒரு அங்கமாகக் காட்டியும், பெரிய மனுஷத்தோரணையில் பேசவைத்தும், கதாநாயகர்களின் சூரத்தனங்களை காட்டுவதற்கு அவர்கள் குழந்தை பருவங்களில் புரிந்த சாகஸங்களை திரையில் தோற்றுவித்தும், குழந்தைகள் பற்றிய உண்மைகளை புறக்கணித்திருக்கின்றனர். குடும்பத்தைக் கொலை செய்த கொலைகாரனிடமிருந்து தப்பி பழி உணர்ச்சியை ஏற்று, அவற்றை பிற்பாடு நியாயப்படுத்துவதற்குமே குழந்தைகளின் தேவைப்பாடு தமிழ்ச் சினிமாக் காரர்களுக்கு இருந்திருக்கிறது.

இவை குழந்தைகளுக்கான திரைப்படம் என்ற ஒரு தனிப்பிரிவை கோடு பிரித்துக்காட்டி அவர்களது சுயங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான ஏற்பாட்டை மறுதலித்திருப்பதாகவே எண்ண முடிகிறது.

பொதுவான கருதுகோளின் அடிப்படையில் விதிவிலக்குகளாக தன்னுள் அடக்கம் பெற்ற குழந்தைச் சினிமாக்கள் பற்றி நாம் இங்கு சற்று சிந்தித்தல் அவசியமாகிறது. இவை முற்றுமுழுக்க நம்பிக்கை தருகின்ற வரவுகளாக இல்லாவிடினும் தமது இலக்கை அடைந்து கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாக இருக்கின்றன. இதன்படி இச்சினிமாக்களின் போக்கை இரு வகையாக பிளந்து விடுவது எனது கண்ணோட்டத்திற்கு ஏதுவானதாக அமைந்து விடுகிறது.

1. குழந்தைகளை குழந்தைகளாக காட்டிய குழந்தைகளின் திரைப்படம்
2. குழந்தைகளுக்காக தயாரிக்கப்பட்ட ஏனைய திரைப்படம்

இவ்விரண்டு கூறுகளுக்குள்ளும் குழந்தைகள் பற்றிய திரைப்படங்களை எம்மால் முற்றுமுழுக்க அடக்க முடியும். தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை இரண்டாவதை விட முதற் கூறுக்கே அதிக சாத்தியங்கள் இருந்ததாக அறியக்கிடக்கிறது. முதற் கூறைப்பற்றி பேசுகின்றவர்கள் அதன் பலவீனங்கள் பற்றியும் பேச நினைத்தல் நல்லதொரு எதிர்காலத்திற்கான சமிக்ஞையாகவும் இருக்கின்றது.

பாலுமகேந்திரா தற்போது குழந்தைகளுக்காகப் பேசி வருகின்றார். இன்றைய குழந்தைகளின் இயற்கையோடு இசைந்த வாழ்க்கையை தொலைக்காட்சி அன்டெனாக்கள் பிடுங்கி எறிந்துவிட்டதாக வருத்தப்படுகின்றார். குழந்தைகளை அவர்களின் உரிய பருவங்களோடு ஒத்திசைவதாகக் காட்டுவதற்கு பிரயத்தனப்படும் இவர், சன் டீவியில் 'கதைநேரம்' பகுதியை குழந்தைகளுகாகவே ஒதுக்கி அதிக ஆர்வம் காட்டி வருகின்றார். இவர் கூறும் போது –

> ''சொட்டாங்கல்லு பட்டாம்பூச்சி இல்லாத உலகத்தை என்னால் யோசிக்க முடியலை. கூட்டாஞ்சோறு ஆக்கி விளையாடம, கண்ணாமூச்சி ரேரேன்று பாடாம ஒரு தலைமுறையே வளர்ந்து வந்துட்டாங்கன்னு அதிர்ச்சியாயிருக்கு. அவர்களது பார்வைகளை, அவர்களுக்கான உலகத்தை திரையில காட்டுவதே இல்லை என்கிற வருத்தம் எனக்கு உண்டு. சினிமாவில் வருகிற குழந்தைகள் பெரிய மனுஷத்தனமாய் பேசுகிறார்கள். குழந்தைகள் குழந்தைகளாகவே காட்டப்பட்ட சினிமாக்களைப் பார்ப்பது அபூர்வமாக இருக்கிறது. குழந்தைகளைப் பொத்தாம் பொதுவாக அணுகமுடியாது. அவர்களுடைய உலகம், புரிதல் எல்லாமே வேறு'' என்கிறார்

இவர் 'அழியாத கோலங்கள்' மூலம் இளமைப்பருவத்து இயல்பூக்கமான உணர்சிகளை வெளிக்கொண்டு வந்து நிறையவே சச்சைக்குள்ளானவர். இப்படம்



மூன்று சிறுவர்களின் பருவ காலத்துச் சேஷ்டைகள், உணர்ச்சிப் பெருக்குகள், ஏக்க தாபங்கள் போன்றனவற்றை சிறப்பாக சித்திரித்து அற்புதமான பாத்திரவார்ப்புடன் புதிய கோணத்துடனான Camera அழகுகளையும் தரிசிக்க வைத்தது.

மகேந்திரனின் திரைப்படங்கள் தமிழ் திரைப்படவுலகில் புது உள்ளடக்கங்களை குறிப்பிட்ட சமகாலத்தில் நிகழ்த்தியிருக்கின்றன. 'பூட்டாத பூட்டுக்கள்', 'நெஞ்சத்தை கிள்ளாதே' போன்றன அவற்றிற்கு சிறந்த எடுத்துக்காட்டு. குழந்தைப் பாக்கியம் கிடைக்காத தம்பதிகள் துயரங்களை சுமந்துகொண்டு வாழும் போது வெளியிலிருந்து வந்த காட்டிலாகா அதிகாரியுடன் குடும்பத்தலைவி தகாத உறவை ஏற்படுத்திக் கொள்கிறாள். பின்னர் அவ்வதிகாரியால் ஏமாற்றப்படுவதும், மீண்டும் கணவனும் மனைவியும் இணைவதுமே 'பூட்டாத பூட்டுக்களின்' கதைச் சுருக்கம். ஆரம்பத்தில் குழந்தை பற்றிய கனவில் கணவனும் மனைவியும் வாழ்கின்றபோது குடும்பத் தலைவன் வீட்டுக்கு ஒரு குழந்தையை கூட்டி வருகின்றான். அக்குழந்தையின் பாலியல் உணர்வுகள் படத்தில் குடும்பத்திற்கெதிராகவே திரும்புகின்றன. சொந்தக் குழந்தைக்கும், பிற குழந்தைகளுக்குமான சிக்கல்கள் சமூகத்தில் ஏற்படுத்துகின்ற இடைவெளிகளை படம் தெளிவாக்குகின்றது. 'நெஞ்சத்தை கிள்ளாதேயில்' வருகின்ற, கார்ஷெட்டில் வேலை புரியும் சிறுவனின் ஏக்கங்கள் (கதாநாகனும், கதாநாயகியும் கைலாகு கொடுக்கும் காட்சி, கதாநாயகியுடன் போட்டோ பிடிக்க வேண்டுகின்ற காட்சிகள், முயற்சிகள்) மகேந்திரனின் குழந்தைகள் பற்றிய பார்வைகளை, எதிர்பார்ப்புகளை அதிகமாக்குகின்றன. ஆரம்ப காலங்களில் நம்பிக்கை தந்த மகேந்திரன் பின்னர் ஏனோ சினிமாவில் இருந்து ஒதுங்கி விட்டார்.

மணிரத்தினத்தின் 'அஞ்சலி' இங்கு முக்கியமானது. மனநிலை தளம்பி, மூளை வளர்ச்சியற்ற ஒரு குழந்தை தான் வாழ்கின்ற சூழலில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை படம் பேச எத்தனிக்கின்றது. ஆழ்ந்த மௌனத்துடனும், தலைவிரி கோலத்தினுடன் நடமாடும் அஞ்சலிக்கு நள்ளிரவில் கத்திக் கூச்சலிடும் வீதியோரத்து பைத்தியகாரன் ஒருவனுக்கு கட்டப்படும் கிலுகிலுப்பையே கட்டிவிடப்படுகிறது. சமூகம் பைத்தியகாரர்களை எப்பொழுதும் ஒதுக்கியும், தூரநின்றும்தான் பார்த்து வந்திருக்கிறது என்பதற்கு அஞ்சலியும் முன்னுதாரணமாகின்றாள். ஆனாலும் குழந்தைகள், காதலிக்கின்றவர்களை பாதுகாத்தல், டைவோர்ஸ் பற்றிபேசுதல் போன்ற மிகைப்படுத்தப்பட்ட காட்சிகளும் 'அஞ்சலியில்' இல்லாமலில்லை.

ஜெயகாந்தனுக்குப் பிறகு தமிழ் சினிமாவில் குறிப்பிட்டுச் சொல்லும் எந்த எழுத்தாளரும் பிரகாசித்ததில்லை. அண்மைக்காலங்களின் பூமணி என்ற எழுத்தாளர் 'கருவேலம் பூக்கள்' படத்தினூடாக தனது காலை ஊன்றிக்கொள்ள முயற்சித்திருக்கின்றார். 'வெக்கை', 'ரீதி', 'பிறகு' போன்ற படைப்புக்களைத் தந்தவரே இந்த பூமணி. தீப்பெட்டித் தொழிற்சாலையில் கந்தக நெடிகளுக்கிடையில் வாழ்வு நடத்தும் சிறுவர்களின் அஸ்தமனமான வாழ்வு பற்றியதாக நகர்ந்து செல்கிறது இப்படம்.

‘குட்டி’ திரைப்படம் அண்மையில் குழந்தைகள் பற்றிப் பேசிய திரைப்படங்களின் வரிசையின் அதிமுக்கியமானது. வியாபார உலகில் மௌனமாக வெற்றி பெற்றுக் கொண்டிருக்கும் படம் இது. வேலைக்கு அமர்த்தப்படுகின்ற குழந்தைகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைளையும், அக்குழந்தைகளின் அச்சமுறுகின்ற எதிர்காலம் பற்றியும் பல வாதப்பிரதிவாதங்களை இத்திரைப்படம் எம்முன் எடுத்து வைக்கின்றது.

களிமண் கொண்டு சட்டி, பானை, குதிரைகள் செய்து விற்றுப்பிழைக்கும் தந்தையின் மகளாக கண்ணம்மா வளர்கிறாள். எதிர்பாராத விபத்தில் தந்தை இறந்து விட குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கி விடுகிறது. கண்ணம்மா நகரத்திற்கு வேலைக்கு அனுப்பப் படுகிறாள். நகரத்தின் பிரமிப்புக்களில் ஆழ்ந்த கண்ணம்மாவுக்கு ஆரம்பத்தில் உரிய அந்தஸ்து கிடைக்கின்றது. இடையில் வந்து சேர்கின்ற அவ்வீட்டு மாமியாரினால் கண்ணம்மா கொடுமைப்படுத்தப் படுகிறாள். வேதனை ஓர் எல்லையை கடந்ததும் எதிக்கடை அண்ணாச்சியிம் அபயம் கேட்டு ஓடி தன் அம்மாவுக்கு கடிதம் எழுதித் தரச் சொல்கின்ற இடத்திலும் சரி, ‘‘பாறைப்பட்டி..... அது மதுரைக்கு அப்பால இருக்கு. அங்கே பாறை பாறையா மரம் மரமா இருக்கும்.’’ என தன் வீட்டு விலாசம் சொல்வதிலும் சரி குட்டி என்கின்ற பாத்திர வார்ப்பின் உச்சத்திறன் ஒரு கணம் எம்மை உலுக்கி விடுகின்றது. இறுதியில் பீடாக்கடை புரோக்கர் கையில் சிக்கி, விலைக்கு விற்கப்பட்ட சரக்காக மும்பைக்கு அனுப்பப்படுவதை உணராமல், துணி மூட்டையை அழுந்த அணைத்துக் கொண்டு, ஊர் போய்ச் சேரும் நம்பிக்கையோடு அந்த பத்து வயது சிறுமி சிரிக்கிறாள். சிவசங்கரியின் கதைக்கு ஜானகி விஸ்வநாதன் என்கின்ற பெண் சினிமா வடிவம் கொடுத்திருக்கிறார். ஒளி ஓவியர் தங்கர்பச்சான் காட்சிகளை செதுக்க அனைவரும் சேர்ந்து ஒரு நல்ல குழந்தைப் படத்தை வெளிக்கொணர முயற்சித்திருக்கின்றனர்.



இரா. நடராஜனின் பிரபல்யமிக்க சிறுகதை ‘ஆயிஷா’ வாகும். வெளிவந்த காலத்தில் அதிகமாகப் பேசப்பட்ட இது தற்போது குறுந் திரைப்படமாக வெளிவந்திருக்கிறது. கொடுமை எல்லைமீறிப் போகும் போது வேதனையை தாங்க முடியாமல் மரத்துப் போகின்ற ஊசியை தன்னுள் ஏற்றி தன்னையே அழித்துக் கொள்கின்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு பாடசாலைச் சிறுமி பற்றிய சித்திரமே ‘ஆயிஷா’ வாகும்.

தமிழ்ச் சினிமா உலகம் மேற்குறிப் பிட்டவைகள் தவிர (சிலவை விடுபட்டிருக்கலாம்)



வேறெதையும் குழந்தைகள் விடயத்தில் சாதித்ததாக மார்தட்டிக் கொள்ள முடியாது ஈழத்திலும் கூட இவ் வகையான முயற்சிகள எதுவும் இடம் பெறாதது இங்குள்ள சினிமாவின் வறுமையையே காட்டுகின்றது.

தமிழில் நிலைமை இவ்வாறிருக்க, பிறமொழிகளில் குழந்தைகள் ஆர்வத்தோடு நோக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற பரவலான கருத்து நிலவி வருகின்றது. ஆனால் இன்னொரு பக்கத்தில் குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கென்றும் தயாரிக்கப்படுகின்ற விளம்பரப்படங்கள், டிஸ்னி கார்ட்டூன்கள் போன்றவை நம்பமுடியாத ஒரு உலகத்தை அவர்கள் முன் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறது. குழந்தைகளின் பயவுணர்வுகளை நீக்கி, வீரத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்ப்பதற்காக தயாரிக்கப்பட்ட டார்ஸன், மொங்கி, றொபின்ஹூட் போன்ற தொடர்கள் இன்று பெரியவர்கள் கூட பார்த்து இரசிக்க முடியாத ஆபாஷங்களை தாங்கி வெளிவந்து கொண்டிருப்பதையும் மறுதலிக்க முடியாது.

சத்யஜித்ரே பிரெஞ்சு டெலிவிசனுக்காக பிக்கு (Pikcoo) என்ற குழந்தை குறும்படத்தை தயாரித்திருந்தார். இப்படம் ஒரு பணக்கார வீட்டுச் சிறுவன் பற்றியதாக அமைந்து காணப்படுகின்றது. ஆர்.கே. நாராயனின் ‘மல்குடி டேய்ஸ்’ தொடர்களும் சிறுவர்களின் உணர்வுகளை துல்லியமாக வெளிப்படுத்தியிருக்கின்றன. மலையாள சினிமா உலகில் ‘கேரஷரங்கள்’ என்ற படம் சிறந்த குழந்தை திரைப்படமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இப்படத்தின் நடித்த அருண் என்ற சிறுவன் ‘மகன்’ என்ற டெலி சீரியலில் நடித்ததற்காகவும் இந்திய மாநில விருதை அண்மையில் பெற்றிருக்கின்றான்.

இலங்கையில் தயாரிக்கப்பட்டு சர்வதேச சினிமா அரங்கிலும், பங்களாதேஷிலும் அமெரிக்காவிலும் நடந்த சர்வதேச திரைப்பட விழாக்களில் சிறப்புப் பரிசுகளை வென்ற ‘சரோஜா’ என்ற சிங்களத் திரைப்படம் இங்கு முக்கியமானது. சரோஜா – வருணி என்கின்ற தமிழ், சிங்கள சிறுமிகளின் ஊடாக பிரச்சினையின் வடிவத்தை நகர்த்திச்செல்லும் பாங்கு முற்றிலும் புதிதான ஒரு வரவாகும்.

இன்றைய ஈரானிய திரைப்படங்கள் குழந்தைகளுக்கான தனி இடத்தை வழங்கியிருக்கின்றன. புரட்சிக்குப் பிந்திய காலப்பகுதியில் ஈரானில் நடந்த விழிப்புணர்வுக்குப் பின் சிறுவர் இளைஞர்களுக்கான திரைப்படங்கள் தனியான ஒரு துறையாக வளரத் தொடங்கியது. அனேக படங்கள் சிறுவர்கள் இளைஞர்கள் தொடர்பானதாகவும் அவர்களது வாழ்க்கையின் பல்வேறு கூறுகளை கருத்தில் கொள்வனவாகமுவுள்ளன. இவை கொண்டுள்ள உள்ளடக்கத்தின் எளிமையான தன்மையும், அவற்றை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற நேர்த்தியானதும், நேர்மையானதுமான தன்மையும் சர்வதேச பார்வைகளை ஈர்த்துக் கொள்ளக் கூடியதுமான கனதியுமாகும்.

ஈரானில் சிறுவர் சம்மந்தமான சினிமா துறையை விருத்தி செய்யும் பொருட்டு பறாபி திரைப்பட நிறுவனம் (Farabi cinema foundation -1983) குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்குமான சினிமா கவுன்சில் ஒன்றை நிறுவியிருக்கிறது. இதன் மூலம் சிறுவர்கள் தொடர்பான தனியான திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதோடு திரைப்பட விழாக்களும் காண்பிக்கப்படுகின்றன.
1994 சான்பிரான்ஸிஸ்கோவில் Colden Gate விருதை வென்ற முஹம்மதலி தஸியால் நெறியாள்கைக்குட்பட்ட End of childhood போன்றவைகள் சிறந்த சிறுவர் படங்களுக்கு உதாரணங்களாக கொள்ளப்படுகின்றன.

உலகின் தலைசிறந்த நான்கு இயக்குநர்களின் வரிசையில் இடம் பெற்றிருக்கும் அப்பாஸ் கியாரொஸ்தமி ஈரானின் மிக முக்கியமானவராக கொள்ளப்படுகின்றார். குழந்தைகள் பற்றியான படம் பண்ணுவது உங்களுக்கு அதிக சுதந்திரத்தை தருகிறதா? என்று அவரிடம் ஒரு முறை கேட்கப்பட்ட போது –

"நான் குழந்தைகளை நேசிக்கிறேன். அவர்கள் மிகவும் உயிப்பான ஜீவன்களாக இருக்கின்றனர். நான் ஒரு உருவப் படம் எடுக்கும் புகைப்படக்காரனாக இருந்தால் நான் குழந்தைகளைத்தான் படமெடுக்கும் கருப்பொருளாகத் தேர்ந்தெடுப்பேன். ஏனென்றால் குழந்தைகள் தான் மிகத் தெளிவாக ஒளிரக் கூடியவர்கள். பல தரப்பான சிக்கலுற்ற மரபுகளும், சமூக ஒப்பந்தங்களும், இவைகளுக்கு மத்தியில் வாழ்க்கையை எப்படிக் கொண்டு போகவேண்டும் என்பதைக் குழந்தைகள் மட்டுமே தெரிந்து வைத்திருக்கிறர்கள். சோகமாக இருந்தாலும் கூட அதற்கு அவர்கள் அதீக கவனத்தை கொடுப்பதில்லை. இவைகளை எனது மகன் மூலம் நினைவு கூர்ந்து பாரப்பேன். அவன் அவனது பாட்டியிடம் மிக நெருக்கமான பாசப்பிணைப்பைக் கொண்டிருந்தான். அவள் சாகும் போது அவன் சந்தோசமாக மற்ற குழந்தைகளோடு விளையாடப் போய்விட்டான். நான் நினைக்கிறேன் வாழ்வதற்கான பாடங்களை குழந்தைகளே எமக்கு கற்றுத்தருகின்றன என்று. அவர்கள் பெரும் மதிநுட்பத்தை கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையை அவர்களின் ஒவ்வொரு நிமிஷத்திலும் மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 'வாழ்க்கை ஒன்றுமில்லை அதற்குமேல்' இந்தப்படத்தில் ஒரு குழந்தை ஒரு முக்கிமான பாத்திரத்தை வகிக்கிறது. இதில் முன் ஈடுபட்ட வேலையின் இழப்பிற்காக கடுமையான வேலைசெய்து கொண்டிருக்கிறார் அவன் அப்பா. இதனின் துயர் களைய இரக்கம் கொண்டும், அக்கறை கொண்டும் அவனுடைய அப்பாவின் வேலைகளின் பங்கெடுத்துக்கொள்கின்றான். இந்தப் பாத்திரத்தில் அவன் இன்னும் வெட்டுக்கிளிகளைப் பிடித்துக் கொண்டு திரிவதை நிறுத்திவிட வில்லை" என்கிறார்.

ஐந்தாவது ஈரானிய திரைப்பட விழாவில் கியாரொஸ்தமியின் ஆறு திரைப்படங்களும், ஆறு குட்டித் திரைப்படங்களும் அண்மையில் கொழும்பில் காண்பிக்கப்பட்டன. இது



இலங்கையில் ஆசிய திரைப்பட நிறுவனத்துடன் (Asian film Centre) இணைந்து நடத்தப்பட்டன. 1980 இவர் இயக்கிய Where is the friend's home என்ற படம் சர்வதேச புகழை இவருக்கு ஈட்டிக் கொடுத்தது. 1989ல் 42வது லெக்கார்னோ சர்வதேச திரைப்படவிழாவில் Bronzc Lcopand விருதையும் இப்படம் தட்டிச் சென்றது. இவ்வகையில் ஈரானிய திரைப்படங்கள் குழந்தைகள் பற்றிய புது உருவத்தையும், உள்ளடக்கத்தையும் வழங்க முற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்னும், வேற்றுமொழிகளில் கூட குழந்தைகளுக்கான சிறந்த திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டிருக்கலாம். கட்டுரையின் நீளம் கருதி சில விடயங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. குழந்தைகளின் பரந்த உலகில் அவர்களது விசாரணைகள், உறவு முறைகள், தொடர்பாடல்கள் போன்றவற்றை உரத்துப்பேசும் முயற்சிகளை வரவேற்பதற்கு சமூகமும், அதன் விழுமியங்களும் கூடிய பங்களிப்பை வழங்க வேண்டும். நீண்ட விவாதமொன்றிற்கான முற்கற்பிதங்களை முன்வைக்கும் இக்குறிப்புக்களில் தொட்டு வாசகர்களும் இக்கட்டுரையை தொடரவேண்டும். இது எமது கடமையும் கூட.

'துயரி' தன்குறித்த எதிர்வினைகளை எதிர்பாக்கின்றது. ஒன்றின் வளர்ச்சியில் அது நடந்து வரும் பாதைபற்றிய தெளிவு அவசியமாகிறது. அப்போதுதான் அது அடையவேண்டிய இலட்சியம் தெளிவாகும் என்பதை துயரி உணர்கிறது. உங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் துயரியின் வளர்ச்சிக்கு உரமாக்குங்கள்.

ஆசிரியர் குழு

## தமிழ்ச் சங்கம்

### தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

### நிருவாக உறுப்பினர்கள் 2001/ 2002

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | எம்.ஏ.எம். றமீஸ் அப்துல்லாஹ் |
| பெரும்பொருளாளர் | : | றாஹிலா ஷியாட் |
| தலைவர் | : | என்.எம். சிறாஜ் மஸ்ஹூர் |
| செயலாளர் | : | கே.எம். சில்மியா |
| உபசெயலாளர் | : | எம்.எம். ஜெஸ்மி |
| இதழாசிரியர்கள் | : | எம். அப்துல் றஸாக் |
| | | எஸ்.எம். அய்யூப் |
| இளம்பொருளாளர் | : | எம்.எச்.எம். ஹரீஸ் |
| குழு உறுப்பினர்கள் | : | ஏ.எல்.எஸ். ஹனூன் |
| | | யு.எல்.எம். அஜ்வத் |
| | | எம்.வை.எம். சுஹிறா |
| | | என்.எம். ஜவ்பர் |
| | | ஏ. ஹுசைனா |
| | | ஏ.ஜே. அதீக் |
| | | எம். வனஜா |
| | | எம்.எச்.எப். நுவைஸா |
| | | எம்.ஐ. ஜனூன் |
| | | ஏம்.எம். ஜுனைதா |
| | | ஏ.எல். ஹிதாயா |
| | | எஸ்.எம். றிஸ்வானா |
| | | ஏ. சியானா |
| | | எம். நவாஸ் சௌபி |

# அழகிய வெட்டுக்களில் சில

## அஸ்வர் மௌஹிடீன்



இடது கால் சொத்தியோடு
இறைவன் முன்னே வந்தால்
அவரது பனியன் ஒன்றும்
அவ்வளவு சுத்தமாய் இருக்க
வில்லையே என்பது - ஒரு
சந்தேகத்தையும் என் உள்ளே
விதைத்துவிடாது.
ஏனெனில்,
உண்மையின் வடிவை யாரால்
புறக்கணிக்க முடியும்?

காமம் உச்சந்தலையை முத்தமிட்டபோதும் இதுபோலேவே - ஆனால் - உருவகப் பிரமாண்ங்களில் நிச்சயப்படுத்தவும், அறியவும் முடியாத நிர்வாணமாய் இருந்தது. என்னுள்ளே கவலையில்லை. பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீரும்......... அர்த்த நாதீஸ்வரத்தில் மூலவிக்ரகங்கள்........... குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பும். இனி - இருள் கசியத் தொடங்கியிருந்தது. மங்கி மங்கி இடையிடையே பிரகாசிக்கும் மின்வானம் ஒடித்திரியும் நவீன கோடுகளை முனை முனையாய் தீட்டிக் கொண்டிருந்தது. எங்கும் ஓவியக்காற்று . நெடுநாட்களுக்குப் பிறகு ஊருக்கு வந்தேன்.

மிகவுமே இசையற்றுப்போன மென்பாடலாய் நான் அங்கு கண்மூடிக் கிடந்த நாளில் நரம்புகளின் வசந்ததரையை விரல்களால் நீ மீட்டிக் கொண்டிருந்தாய் - உனது ராகம் - வானத்தைப்போல் திசை எங்கும் விரிந்தது. உள்ளிழையை அவை குளிர்த்துவதாய் மௌனிதத்தே. சரணாகதித்த எனது பேசமுடியாமைகள்

யாவும் உனது தனிமையை சப்பாது விடுவதில்லையா? உடலம் நீ - என்னது நிழலை ஏந்த முடியாததென்று நிச்சயித்து விட்டபிறகும் கனவுற்று நான் இங்கே பற்றி எரிவதும், மாயக் கற்பிதத்தில் மூழ்கித் துயில்வதும், துயரார்ந்து சுகாந்திரமே அதுவென்று அர்த்தப்படுவதும்....... எதுவுமே உனது ஞாபகங்களை காயப்படுத்துவதில்லையா? யாரோ, பேசிக் கொண்டிருந்தார்கள். கனவை எழுதும் மகோன்னதமும், கீற்றோசையும் கலந்த ரகசியமான குரல்கள்.

புத்தகத்தைத் திறந்தேன் - கிருஷ்ணன் நம்பியின் நினைவுக் கென்றிருந்தது. இன்னும் திறந்தேன் - நீ எப்படி இருக்க விரும்புகின்றாயோ அப்படியே இரு என்றிருந்தது.
சரணாகதியில் பல இரவுகள்.

மூச்சும் முழுவியர்வையும் மாறி மாறி ஆசுவாசப்படுத்தியதில் தூங்கிப் போனேன். வால்சிவந்த சிறு பறவை இன்றைக்கும், வானில் இருளைக் கடந்து செல்லுமா? காத்திருக்க வேண்டுமென்ற நினைவுமில்லாத தூக்கம் எனைக் முடிவைத்து விட்டது.

வெட்கமும் விழிப்புணர்வும் அழகிய கிண்ணங்களில் நிரம்பி இருக்கின்றன . இழைகள் கரையும் போர்வையின் இருள். வெட்கத்தின் கிண்ணத்தை அள்ளிப் பருகி, நாளொன்றுக்கு இருபத்திமூவாயிரம் தடவைகள் வெட்கப்பட்டு, வெட்கப்பட்டு..... கனவுற்றேன். உண்மையில் எல்லா வெட்கங்களும் கோடுகளில்தான் ஆரம்பிக்கின்றன. நட்சத்திரங்களற்ற இரவு நீண்டு கிடந்தது.

புள்ளி உதடுகள்
உட்கன்னம் ஓரத்தே குழியும்
பெண்ணொருத்தியின் இறுகிய கொங்கை- வெட்கத்தின் குறியீடாய் நடமாடும் தேடிப்பார்க்கிறேன். கவிந்த இருளில் அடையாளம் அற்று திரும்புகிறது எனது விரல்.

அற்புதமான மெதுமையால் கனவின் ஆழத்திலிருந்து மீண்டெழுகையில் தெளிவோடு இருந்ததாய்த் தோன்றுகிறது. தெளிவோடு இருக்க குழப்பங்களை ஏந்திக் கொள்கிறவனோ என்று அச்சம் மூழ்வதால் - தனிமையின் மெல்லிய சுகமும் என்னிடமில்லை கருணையற்ற பிரிவின் சூனியமும் இல்லை என பிராத்தித்துக் கொள்ளவும் நேர்ந்துவிட்டது.



எனது வேண்டுதல்கள் முதலில் கேட்கப்போவது யார் செவியில்?
சாத்தான்: பெரிய செவியன். நினையுந்தோறெலாம் வாசலில் வருகிறதில் கருணையாளன். பூர்வீகத்தின் ஆரம்பப் போராளி என்பதிலும் அவனில் ஒரு தனிமதிப்பிருக்கிறது. அவனோ காற்றுக்கூட அவனில் பட்டுத்தான் என்னில் படும்மென்றாகிப் போகுமளவு கதவின் பரிமாணந்தில் நிரம்பியிருக்க வேண்டுமென்கிறான். ஷஷவர்ணங்களற்ற நெடும்புகையே! ரகசியமே! எனை ஆழும் உருவமற்ற பேயே!" என்றேன்.

சிரித்தான்.

மனதில் இருந்து எல்லா நினைவுகளையும் அழித்து விடலாம் போல் இருக்கிறது.

வெளியே காகங்கள் கரைந்து கொண்டிருந்தன.
முத்தத்தின் மிருதுணர்வோ, கதகதப்போ இல்லாத எல்லாக் காகமும் கறுப்பாகவே கரைகின்றன. சாமித்தம்பி காகத்தையோ, சல்மா காகத்தையோ இனங்காண வேண்டுமென்ற அவாவுமில்லாத என்னை ஒரு கரைதல் பெரிதுமே பாதித்துவிட்டது. கரையும் போது அது "சோக்கிரடீஸ்" "சோக்கிரடீஸ்" என கரைவதாய் இருக்கும் எனக்கு. சோக்கிரடீஸுக்கு வலது கால் இல்லை. ஒற்றைக் காலில் பறந்து வாழும் கரிய தத்துவம். ஒரு முறை பார்த்ததுதான். அது எவ்வாறு நடக்கும்? எவ்வாறு தத்திக்காட்டும்? கொப்புகளில் கனிபறித்து எங்கே நழுவாது பிடிக்கும்? இப்படி எதையுமே நான் யோசித்தவனில்லை 'சோக்கிரடீஸ்' ஆணா? பெண்ணா? என்கிறதும் தெரியாத போதில் - பெண்ணாக இருக்கலாம் ' அவ்வாறெனில் இதன் ஒன்றை இதனில் புணரும் போது எங்ஙணம் அதனைத் தாங்கிக் கொள்ளும்? சுடுமா? வேர்கள் கருகுமா? நான் கொண்ட உலகமகாக் கவலை இது ஒன்றுதான் .

இரண்டு மாதங்களாயிற்று.

இன்றைக்கு சோக்கிரடீஸ் வரும். வருமென்று யாரும் சொல்லவில்லை, ஆனாலும் வரும்.

தேனீரின் சடைசிச் சொட்டும், புகையின் ஆழ்ந்த இழுப்பும் காலைக்கடனை இலகுவாக்குமென்ற ஆச்சாரத்துள் குறுக்கப்பட்ட ஒருவன் தெருக்கடைக்கு விரைவது போல் இருந்தது எனது நடை. மாவிலைகளில் இடறி முறிந்து முழுச் சூரியனின் மூளிப் பொட்டுக்கள் மணலில் குந்தியிருக்கின்றன. நீரற்ற வாழை தலைவாராக்

காற்றை சபித்துக் கொண்டிருந்தது. சாறனைமடித்து அடிவயிற்றில் முடிச்சிட்டு செருப்பில்லாத கால்களை வெளியே செலுத்துவதென்ற முடிவில் வலதையும் இடதையும் ஒரு முறை பார்க்கின்றேன். கண்கள் பூழை பிடித்திருக்குமா? என்ற அழகியல் அப்போதைக்கு எழவில்லை.

என்ன ஆச்சரியம்!, சோக்கிரடீஸ் ஒரு மாட்டை கவ்வி வந்து நிழலில் அமர்கிறான். ஒருவேளை ஏனது ஆடாகவோ பன்றியாகவோ இருக்க
முடியாது? பன்றிகள் நம்மூரில் இல்லை, ஆடுகள் ஆடம்பரமானவை, ஊரில் இன்னுமே மாடுகள் இருக்கின்றன. இறைவனின் தீர்ப்பில் இந்த எலும்பு எழுப்பப்படுமா? அவ்வாறெனில் இது மாடாக எழும்புவதையே நான் விரும்புகிறேன்.

சோக்கிரடீஸுக்கு என்ன சொல்வது, "good morning" சொல்லலாமா?
கா, கா என்றால் ஏளனத்தை விரித்துக் காட்டுமா?

வருமென்றது வந்துவிட்டதே, அப்படியென்ன அவுலியாத்தனம் எனக்கிருக்கிறதென புலப்படவில்லை.

இன்று அழகின் வெட்கமொன்று நிச்சயமாக எனக்கு பரிசளிக்கப்படும்.

கால்களை மாற்றி மாற்றி தெருக்கடையை நெருங்கும்போது கடைமுன் வீதி ஈரமாய் இருந்தது. இளநீரின் ஓலையொன்று சலாத்தைப் போன்று (தமிழ் திரைப்பட கதாநாயக நாயகிகள் கூறும் சலாம்) மடிந்திருந்தது... அவளும் இப்போது குளித்திருப்பாள், நீரின் குட்டிகள் கூந்தலில் உதிர்ந்து முந்தானையில் பூத்திருக்கும், முதுகின் பள்ளத்தில் ரவிக்கை ஈரமாக அப்பி இருக்கும். வழமையான கறுப்பு உள்ளாடை ஈரலிப்பினால் சற்று நீளமாகத் தெரியும். இதுகளோடு சிலவேளை குழந்தை அவளது மார்புகளை சப்பிக் கொண்டிருக்குமாயின் என்னை காண்கிறதில் அழகின் வெட்கமொன்றை எனக்கவள் பரிசளிக்க முடியும்.


பத்து ரூபாய் காசும், இரண்டு ரூபாய் கடனுமாக (பிறகு தருகிறேன் என்று) கொடுக்க மூன்று சிகரெட்டுகளை வாங்கியபோது அவளின் எதையுமே என்னால் பார்க்க முடியவில்லை. சிறுமேசைக்கு அப்பாலும் இப்பாலும் நான் என்கிற தேவையும் அவளென்கிற தேவதையுமாக கற்பனை செய்ய இப்போது முடியவில்லை. அனுபந்தம் போல என் பார்வையோடு ஒரு புன்னகை கொடுத்த போதும், கிலுகிலுப்பையொன்றில் ஒரு கொத்து புன்னகையை அவள் எனக்குத்



திருப்பித்தந்தாள். அவளது உதடுகள் நழுவி நழுவி கன்னத்தின் பெரும்பகுதியை மறைத்துவிட்டன. குழிய முடியாத உட்கன்னம் வீங்கியிருந்தது.

அவள் வருவளா? அவள் வருவளா? உடைந்து போன என் நெஞ்சை ஒட்டவைக்க வருவாளா?
என்று சீட்டி அடித்தபடி வசந்த மாளிகைக்குப் பயணமானேன்.

சேக் அஹமட் மூனாவிடம் ஒரு கூடை முழுதும் காலக் குப்பையும், நினைவுப் பசையும் இருக்கிறது. வசந்தமாளிகையின் பூட்டப்பட்ட அறையுள் அவன் செண்பகங்கள் செய்தான். மருதாணிகள் பூத்தபோது செண்பகங்கள் நடனமாடின. பாடமுடியாத செண்பகங்கள் நாதவடிவான பேய்களைப் போல் மிதந்து நெருங்கின. அவைகளின் கூந்தல் : ஒருத்தியின் கூந்தலைப்போல் நெளிந்திருந்தது. கால்கள் : இன்னொருத்தியினது போல் செம்பச்சை பனிமெழுகாயின. மார்பகங்கள் : பிரமாண்டமானதும் பருத்தும் கிடந்தன. விழிகளில் வேறொருத்தியின் நனைந்த பார்வையும், தெத்துப்பல்லும், ஜூலை மாதத்து அவளின் கட்டி உதடுகளும்..........
"அண்ணே, நீ எப்படி இருக்க விரும்புகிறாய்? சும்மா சொல்லேன் " என்றேன்
"என்னம்பி பகிடியா, வட்டமடுவுக்க வெள்ளாம செய்தவன் சந்திரமண்டலத்துக்கு போகலாமா? - நீலாம்ஸ்ரோங் ஆக எனக்கும் சமுசயந்தான் . கொடுப்பின களனிக்க இல்ல இருக்கு - நாம ஆயிரம் விரும்புறது. ஒன்னும் கஷ்டமில்லை கெடக்கிற மாதிரித்தானே பொறுக்கனும் கொஞ்சம் அப்பிடி இப்பிடின்னு தேடலாந்தான். கடலுக்க போய் கச்சான் கொட்டை தேடலாமோ? நான் சொல்லுறதுதான் சரியென்றும் சொல்லல்ல - சரின்னு மனசு எத நம்புதோ அதத்தான் சொல்றன்"
"அட நீ பாலுமாதிரி பேசுறயே " என்றேன்
"சும்மா வகுத்தெரிச்சலை கிட்டாத தம்பி. ஆராரோ பேசுறதயெல்லாம் கோருத்து எழுதிப்போட்டு பாலுடயும், ஜே.ஜே.யின்டையும் தலையிலே கட்டியிருக்கான் அந்த மனுசன். ஆனா ஒண்டு அப்பிடி எழுதுறதுக்கும் ஒரு இது வேணும். பெரியாள்த்தான்"
தேனீர்க் கோப்பையை பட்டென்று வைத்தார். கடைசிச் சொட்டில் மண்டி கறுத்திருந்தது. அண்ணாந்து பார்த்தேன் சுவர் முழுதும் வார்த்தைகள். எனது காதலியின் புன்னகையில் மதிமயங்கி நிற்கும் போது இது புன்னகையல்ல பேயின் சிரிப்பென்றார்கள் - எது?






ஒரு சமூகத்தை ஆட்சிசெய்யும் அரசனாக ஆயுதம் இருக்கும் காலமெல்லாம் அச்சமூகம் சீர்பெற்ற சமூகமாக சீரடையாது.

ஒரு சமூகத்தின் ஆளுகைக்குள்தான் ஆயுதம் வரவேண்டுமே தவிர மனிதனை கயிறு கட்டி இழுக்கும் மேய்ப்பாளனாக அது இருக்கக் கூடாது.

மனித வளர்ச்சியில், அவன் உருவாக்கத்தில், சிந்தனை வளர்ச்சியில் ஆயுதத்திற்கு ஆணித்தரமான பங்கு உண்டு என்பதில் நூறு விழுக்காடு நிஜமுண்டு.

கத்தி கண்டுபிடிக்கப்பட்ட போது அது மிருகத்தை மட்டும் கொல்லவில்லை. மனிதனுக்குள் மறைந்து கிடந்த மிருகத்தையும் சேர்த்தே கொன்றது. அம்பின் முனை கூராக்கப்பட்டு அம்பறாத்தூணியில் வைக்கப்பட்ட போது மனித சிந்தனையும் சேர்ந்தே கூர்மையானது.

மனித நாகரீகத்தை கட்டியெழுப்பிய ஆயுதம் இன்று மனிதனையே கொன்று நாகரீகத்தைக் குழியினுள் போட்டு மண்வெட்டியினால் மூடுகின்றது.

மனிதனுக்குள் ஒழிந்து கொண்டு நாட்டியமாடிய மிருகத்தை கொன்ற ஆயுதம் , இன்று மனிதனையே மிருகமாக்கி அவன் கால்களிலும் கைகளிலும் வேட்டை நகங்களை பூட்டி வைக்கிறது.

ஆயுதம் என்பது அநியாயமல்ல, கத்தி என்பது கபடமல்ல. அவை தொடமுடியாத தொழுநோய்களும் அல்ல.

ஏந்தும் கரங்கள்தான் ஆயுதத்தின் பயன்பாட்டை தீர்மானிக்கின்றது. வைத்தியரின் கையில் அது உயிர்காக்கிறது. திருடனின் கையில் அது உயிர் போக்கின்றது.

இன்று எங்கு பார்த்தாலும் ஆயுதமெனும் பேய் இரத்தம் குடித்துக் கொண்டு இருக்கின்றது. மனித உயிர்களில் இருந்தே அப்பேய் இரத்தம் உறுஞ்சுகின்றது.

மனிதனைக் காக்க வந்த ஆயுதங்கள் மனிதங்களை புதைத்து மிருகத்தை வளர வைக்கின்றது. ஒவ்வொரு வீடும் உணவு சமைப்பது போல் ஒவ்வொரு நாடும் ஆயுதம் தயாரிக்கின்றது. பிறக்கும் பிள்ளை ஆயுதத்துடனேயே இனிப்பிறக்கும்.

இயற்கையும் கூட ஆயுதம் வைத்திருக்கின்றது.

மலரின்ஆயுதம் – ரோஜாவின் முள்
மரத்தின்ஆயுதம் – சூரையின் முள்
இலையின்ஆயுதம் – கள்ளி முள்
பறவையின்ஆயுதம் – சொண்டு, நகம்
மிருகத்தின்ஆயுதம் – பல்,வேட்டை நகம்
இயற்கையின் ஆயுதங்கள் அவற்றின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்குமே

பயன்படுகின்றன. மனித ஆயுதங்கள் மட்டும்தான் அடுத்தவனுக்கு குழிதோண்டுவதுக்குப் பயன்படுகின்றது. காரணம், மனிதன் தன்னளவிலேயே ஒரு ஆயுதம்: அவன் செயற்கை ஆயுதமும் ஏந்துகிறான்.

இயற்கையின் ஆயுதங்கள் இயற்கையானவை. எனவேதான் மனித ஆயுதங்களிலிருந்து அவை வேறுபடுகின்றன.

உலகமயமாதல் என்றும், பூகோள கிராமம் என்றும், உலகத்தின் விரிவுபற்றியும், தொடர்புபற்றியும் பேசுகின்றோம். ஆனால் மனித மனங்களெல்லாம் குறுகிப்போனதை யார் பேசுகின்றார்கள்?

ஏனைய கிரகங்களுக்கு கால்வைப்பதற்குக் கூடச் சிந்திக்கிறோம். திட்டங்கள் தீட்டுகின்றோம் மாநாடுகள் போடுகின்றோம். ஆனால் அடுத்தவன் உள்ளத்தில் கருணை வைப்பதற்குச் சிந்தித்தோமா?

நாம் சிந்திப்பதெல்லாம் அடுத்தவனை எப்படி வீழ்த்துவது? ஆயுதத்தின் கூர்மையை அடுத்தவனின் எப்படி பார்ப்பது? என்பது பற்றித்தான்.

தன்னை உலகமகா சக்தி எனக்காட்டுவதற்கும், தனது சுயநலத்திற்காகவும் ஆயுதக்காற்றை அடுத்தவனைச் சுவாசிக்கச் சூழ்ச்சிசெய்கிறோம். இந்த மனிதாபிமானமற்ற மானிடர்களால் ஓர் ஆரோக்கியமுள்ள சமூதாயத்திற்குப் பதிலாக குறைப்பிரசவங்களே சூல் கொள்கின்றன.

எதியோப்பிய மக்கள் ஏன் இளைத்துப்போனார்கள்? அவர்கள் உடல்கள் எல்லாம் ஏன் குச்சியாய் குன்றிப்போனது?

பலஸ்தீன மக்கள் ஏன் பாடாய்ப் படுகிறார்கள்? அவர்கள் கரங்கள் ஏன் கற்களாய் பரிணாமமடைகின்றன?

அகதிமுகாம்கள் மனிதர்களை விட அதிகரித்ததேன்? பூமியின் முகங்கள்

எல்லாம் புண்களாய் புடம் போடப்பட்டதேன்? பூக்கள் சுமக்க வேண்டிய கரங்கள் சிலுவைகள் சுமப்பதேன்? தெருவோரமெல்லாம் திருவோடுகள் மலிந்ததேன்.?

எல்லாம் யுத்தத்தின் அடாவடித்தனந்தான். யுத்தம் சூல்கொண்டு பெற்ற குழந்தைகள் தான் இவை. இதனால் தான் இன்றைய சூழல் ஆயுதச்சூழலாக இருக்கிறது. ஆயுதக்கலாச்சாரமாக இருக்கின்றது.

ஆயுதமென்ற சொல்லே அனைவருக்கும் தேசிய கீதமாகிவிட்டது. போர்க் கொடியே தேசியக் கொடியாகிவிட்டது. வெடிகுண்டும்,விலங்குகளும் அனைவரும் அணியும் ஆபரங்கள் ஆகிவிட்டன. நிலங்கள் முழுவதையும் இராணுவ முகாம்களும், பதுங்கு குழிகளும் கண்ணி வெடிகளுமே ஆக்கிரமித்திருக்கின்றன.



உலகில் இராணுவ முகாம்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை மட்டும் விடுவித்தால் நிலப்பிரச்சினையில் கால்வாசியை ஈடுசெய்யமுடியும். அந்நிலத்தில் ஏதாவது பயிர் இட்டால் உணவுப்பிரச்சினையில் சிலதை சீர்செய்யமுடியும்.

மனித தேவைகள் மடுவத்தில் வீசப்படுகின்றன. யுத்தத்தின் குழந்தைகள் உச்சத்தில் ஊர்வலம் போகின்றன. மனிதன் எனும் உன்னதக் குழந்தை பாசியைத் தின்று வளர்கின்றது. யுத்தம் எனும் பேய்க் குழந்தை தங்கபஸ்பம் தரணியில் உண்கின்றது. யுத்தத்திற்கும் அதனை மேற்கொள்ளும் அரசபடைக்கும் கிடைக்கும் சொகுசுகள் நாட்டில் வாழும் குடிமக்களுக்கு கிடைப்பதில்லை. இந்த நிஜங்களை கவிஞர் எம்.எச்.எம்.அஷ்ரஃபின் கவிதை யொன்று கணக்காய்ப் படம் பிடிக்கின்றது.

''மீன்பிடிக்கும் பெரும்வலைகள்
அங்குமிங்கும்
தொங்குவதைக் கண்டு நீ
அஞ்சினாய்
இது மீன்பிடிக்காரர்களின்
குடித்தனமா என்று கேட்டாய்!

இது மீன்பிடிக்காரர்களின் குடித்தனமல்ல
பொடியன்கள் குண்டுகளை வீசினால்
பட்டுத்தெறித்து வெடிக்காமல் இருப்பதற்கான
பாதுகாப்புகளே!

என்று நானுனக்கு விளக்கம் சொன்னேன்.
மலைகளாய் குவிக்கப்பட்டிருக்கும்
மணல் முட்டைகளை கண்டதும் நீ
மலைத்து நின்றாய்!

நிச்சயமாய் இது நெல்சந்தைப்படுத்தும்
தினைக்களமுமல்ல
பசளைக் கூட்டுத்தாபனமுமல்ல "



தந்தையும், மகனும் ஒரு இராணுவ முகாமுக்குச் சென்றபோது கண்டகாட்சிகள்தான் இவை. இக்கவிதை வித்தியாசமான கவிதை. எள்ளல் துள்ளக் கேள்விக்கேட்டு விடையும் தருகிறது. அந்த விடையினூடே ஆழமான கருத்துக்கள் பாய்ச்சப்படுவதையும் காணலாம்.

மானிட தேவைகள் புறக்கணிக்கப்பட்டதையும், அதனால் உண்டான வெற்றிடம் நிரப்பப்படாமல் இருப்பதால் பார்க்கும் இடமெல்லாம் பார்க்கும் பொருளெல்லாம் தான் வேண்டும் அம்சத்தைப் பார்ப்பதனையும் இக்கவிதை கட்டியம் கூறுகின்றது.
கவிஞருடைய இன்னுமொரு கவிதை யுத்தகாலத்து இரவுகள் எப்படி யிருக்குமென

வாழ்ந்து காட்டுகின்றது.

''பேய்களும் பிசாசுகளும் கூட
இந்த இரவுகளில் வெளிவருவதில்லை.
மந்திரவாதிகளுக்கும் வேலையில்லை
அத்தனை பயம்
ஆறு மணியுடன்
ஊரே அடங்கிவிடுகின்றது.!

நாய்களோ
வழமைக்கு மாறாய்
எந்த நேரமும்
குரைத்துக் கொண்டிருக்கின்றன
அதனால் தூக்கமும்
குலைந்து கொண்டேயிருக்கிறது.!
அங்குமிங்கும்
அலைந்து திரியும்
வாகனங்களிலிருந்து வரும்
ஒலிகளுக்கோ குறைவில்லை!

''டுமீல்! டுமீல்!''
வெடிகளும் கேட்கின்றன
எங்கள் வீடுகளுக்கு வெளியே
வீதிகளில் யாரோ
எந்த நேரமும்
நடமாடிக் கொண்டேயுள்ளார்கள்
அவர்கள்
இராணுவத்தைச் சேர்ந்தவர்களாய்
அல்லது
புலிகளாகவும் இருக்கலாம்
ஊர்காவல் படையினரின்
உலாவாகவும் இருக்கலாம்!

எட்டிப்பாக்கலாம் தான்
எனினும் வெடிபட்டால் என்ன செய்வது?
நினைத்தாலும்
இரத்தம் உறையப் பார்க்கிறதே!
எங்கள் வளவுகளுக்குள்ளும்
ஆட்களின் நடமாட்டம் கேட்கிறது!
கிணற்றடியில் துலாவை





யாரோ இழுத்துக் கொண்டிருக்கிறார்

அடுத்த அறையில்
பெண்கள் துயிலுமிடத்தில் அவர்களுக்கருகே
இன்னொருத்தன் வந்தொளிந்தாலும்
தெரியாத காரிருள்!

எப்போது விடியப் போகிறது
இவ்வறையை விட்டும்
வெளி வருவதும் எப்படியோ?''

அழகான காட்சிப்படுத்தல் கொண்ட ஒரு கவிதையின் பகுதிகள் இவை. பொழுது சாயத்தொடங்கினால் அச்சமும் பயமும் அமைதியின்மையும் உதயமாகத் தொடங்குகின்றன என்பதுதான் எம்மக்களின் சோகமான வாழ்க்கை.

இவை கற்பனைகள் அல்ல கவிதைக்கு பொய்யழகு என்பதால் செய்யப்பட்ட ஒப்பனைகளல்ல நிகழ்கால வாழ்க்கையின் நறுக்கியெடுக்கப்பட்ட ஒரு நிஜத்துண்டுதான் இக்காட்சிப்படுத்தல்

ஆவியுலகமே வெளிவருவதற்கு அச்சப்படுகின்றதென்றால் மனிதன் எங்கனம் ? இந்த இரவு எங்கனம்?

ஆறுமணியென்பது இரவைத் தொடக்கி வைப்பதற்கான அடையாளம் அல்ல மக்களை அடக்கி வைப்பதற்கான கைவிலங்கு-நாய்கள் விடியும் வரை குரைக்கின்றன. எனவே யாரோ இரவில் வருகிறார்கள். வாகனங்களின் ஊளையும் அதனை உறுதிப்படுத்துகின்றன. துவக்கோசைச் சத்தம் எட்டுத்திசையும் பட்டுத்தெறிக்கின்றது.

ஏழையின் குடிசையில், செல்வந்தனின் மாடிகளில், கட்டாந் தரையில், விழைந்த தோட்டத்தில், பாடசாலையில், பதுங்கு குழியில் 'ஷெல்'மழை வர்க்க பேதமின்றி பொழிகின்றது.


வீதிகளில் சரளைக்கற்கள் அரைபட நடக்கும் பூட்ஸ்கால்களின் ஒலி தம் வீட்டை நோக்கி நீள்கின்றனவா என எல்லா மக்களின் உள்ளத்திலும் ஆழமான பயம் ஆக்கிரமிக்கின்றது.

தும்மல், இருமல் வந்தால் கூட அடக்கியே வாசிக்க வேண்டும். உயிரைப் பறிக்கும் நோய் தாக்கினாலும் விடிந்த பின்னே விரைய வேண்டும். இத்தனையும் நடப்பதால் இரவு என்பது விழிப்பதற்கும், பகல் என்பது உறங்குவதற்கும் என்ற விதி தலைவிதியாகிவிட்டது.

யுத்தகால அவஸ்தைகளில் ஒன்றுதான் சோதனைச் சாவடி (Check point ) என்று அடிக்கடி பயணிகளை அனுப்பும் அவசரச் சிறை அங்கு எழுதப்பட்டிருக்கும் 'நிறுத்தவும்' எனும் வார்த்தையின் அர்த்தம் 'உயிரை கொஞ்சநேரம் நிறுத்தவும்' என்பதே

கருணையில்லாதவர்கள், கறுப்புக் கண்ணாடிகள் போட்டு உலகைப்பாப்பவர்கள் இவர்கள்தான் அங்கு கூடு கட்டியிருக்கின்றார்கள். ஒரு நூற்றாண்டுக்குத் தேவையான நெருப்பையும் வெடிமருந்தையும் அவர்கள் முகங்களில் பெறலாம். சோதனை என்ற பெயரில் மக்களை துன்புறுத்துவதில் சாதனை படைக்கின்றனர்.
வயது போனவர்கள், நோயாளிகள், பெண்கள்,சிறுவர்கள் எல்லோரும் இவர்களுக்கு உருவங்கள் தான்.

எம்நாட்டு மக்களின் ஆயுட்காலம் குறைந்தமைக்கு சோதனைச் சாவடிகளில் குறுந்தூரம் ஓடியமையும் காரணமாயிருக்கலாம். 'காற்றென்ன, மழையென்ன, வெயிலென்ன, குளிரென்ன இறங்கித்தான் ஆகவேண்டும் சோதனைகள் நடக்கும் ஒத்துழைக்கவேண்டும் படக்கூடாத இடங்களின், தொடக்கூடாத இடங்களில் அவர்கள் கைபடலாம். பாயலாம் குழம்பக்கூடாது. பொறுக்க வேண்டும். காரணம் அவர்கள் சோதனை செய்கிறார்கள்.



அது சரி அவர்கள் எதனைச் சோதனை செய்கிறார்கள்?
மறைப்பது என்பது நாகரீகத்துடன் தொடர்பானது
இவர்கள் திறக்கச்சொல்கிறார்களே!
இது எதனுடன் தொடர்பானது?

உண்ணும் உணவிலும் இவர்கள் ஊசி நுளையும் முட்டையின் உள்ளேயும் ஊசி பாயும். முட்டைக்குள் குண்டு இருக்கலாம் அல்லவா?

ஆறறிவுள்ள மனிதர்கள் தேடிக்கண்டுப் பிடிக்காததை ஐந்தறிவுள்ள நாய்களும் தேடும். எதுபுனிதம், எதுபுனிதமில்லை என்பது நாய்களுக்கெப்படித் தெரியும்? சொல்லும் இடத்தில் நிறுத்தவேண்டும் காட்டும் இடத்தில் கையொப்பம் இடவேண்டும். இல்லாவிட்டால் கனத்த ஆயுதங்கள் தலையைநோக்கி நீளும்

''பாதையின் குறுக்கே
ஏதோ நடக்கிறது
எதற்கும் மெதுவாய்ப் போ!

காக்கிக் கால் சட்டைகள்
கனக்கத் தெரிகின்றன
வீதியின் நடுவே ஒரு வீரன்
வந்து எமை நோக்கித் தன்
துப்பாக்கியால்
குறிவைக்கிறான்.!



காரை நிறுத்து
மனம் கலங்காதே!
இப்போது பார்
எங்குமே துப்பாக்கிகள்
அவை
எல்லாவற்றினதும் குறி
எம்மிரு உயிர்களுமே!''

சோதனைச் சாவடிகளில் இருப்பவர்கள் பேசுகின்ற வார்த்தைகளில் புயலும், பூகம்பமும் ஒருமித்துப் பாயும். மென்மையான வார்த்தை, இங்கிதமான பேச்சு, வயதறிந்து நிலையறிந்து பேசுதல் என்பனவற்றை பகல் நட்சத்திரமாய் அவர்களிடம் எதிர்பார்க்கமுடியாதது.

''மரியாதையாய்ப் பேசுகின்றார்கள்
இவர்கள் நிச்சயமாய்
இராணுவத்தைச் சேர்ந்தவர்களாய்
இருக்க முடியாது.''

ஒரு சோதனைச் சாவடியில் கவிஞர் படம்பிடித்த காட்சிகள் இவை

கவிஞர் அஷ்ரஃபை பொறுத்தவரை அவர் ஆயுதம் ஆட்சி செய்யும் சூழலில் வாழ்ந்தவர். அரசியல் போராட்டத்தில் பங்கெடுத்தவர். அனேக தடைவைகள் ஆயுத அச்சுறுத்தலுக்கு உட்பட்டவர். அவர் மரணமும் கூட ஆயுதத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாக அமைந்தது.

அவர் நெருப்பை பார்த்துக் கவிதை எழுதியவரல்ல. நெருப்பால் சுடப்பட்டதால் கவிதை எழுதியவர். அதனால் தான் அவர் கவிதைகளில் அனல் வீசுகின்றன அவரது வாழ்வு முழுவதும் போராட்டமாய் அமைந்ததால் அவரது கவிதைகளும் ஆயுதம் தூக்குகின்றன. போராட்ட களத்திலும், போராட்ட சூழலிலும் நின்று கவிதை பாடியதால் அவரது கவிதைகள் நிஜங்களை நிரல்படுத்துகின்றன.

போராட்ட வாழ்விலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட சிறு சிறு துண்டுகள் தான் அஷ்ரஃப்பின் கவிதைகள். இதனால் தான் அவர் கவிதைகள் தேசத்தின் எல்லைக் கோடுகளைக் கடந்து மானிட சமுதாயத்திற்காக போராடுகின்றன். இந்தப் போராட்டம் உலகம் சுவாசித்துக் கொண்டிருக்கும் வரை தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

# தனிமை ஒற்றுமை

எனக்கான வாழ்வில்
நான் மட்டும் வாழ்ந்திருந்தேன்
உனக்கான வாழ்வையும்
ஏந்திக்கென்டு
நீயும் என்னோடு இணைந்தாய்


நமக்கான வாழ்வை
நாம் வாழத்தொடங்கினோம்
நம்மைத்தவிர
நமக்கிடையில் வேறேதுமில்லை

நாம் என்ற பன்மையில்
ஒருமையாய்
ஒளிந்திருந்தோம்

பிரிவேயில்லாத துருவத்தில்
சங்கமித்து
ஒருவருக்காய் ஒருவரை
பகிர்ந்து கொண்டோம்

எந்த இழப்பையும்
நம்மைக் கொண்டே
நிரப்பிவைத்து
நிஜத்தின் மடியில்
நிரந்தரமானோம்





இப்படியே தொடர்ந்த
நம் வாழ்வை
எதுவுமே
ஆசிர்வதிக்க மறுத்ததில்லை.

யாருமே எதிர்பார்க்காத
ஒரு பொழுதில் எங்கிருந்தோ
எமக்கான பிரிவைச்
சுமந்துவந்து
காலம் நமக்கிடையில்
இறக்கிவைத்தது.

நமக்குள் நாமாய்
இருந்த நாம்
நானும் நீயுமாய்
தனித்தனியே
துரத்தப்பட்டோம்.

இப்போதும் என்ன
என் தனிமையிலும்
நீதான் நிரம்பியிருக்கிறாய்.
உன் தனிமையில்
நான் இருக்கிறேனா?

நவாஸ் சௌபி

# அறிஞர் அல் கஸ்ஸாலி - கவிஞர் அல்லாமா இக்பால்

## ஓர் ஒப்பியல் நோக்கு:



ஜெஸ்மி



மத்திய காலத்தில் தோன்றி வளர்ந்த கிரேக்க தத்துவ ஞானத்தின் பிடியிலிருந்து இஸ்லாத்தினை மீட்பதற்குப் புறப்பட்ட சிந்தனையாளர்களுள் குறிப்பிடத்தக்கோர் இமாம் கஸ்ஸாலியும், கவிஞர் அல்லாமா இக்பாலுமாகும். கி.பி. 661 தொடக்கம் 750 வரை இஸ்லாமிய உலகினைக் கௌவிக் கொண்டிருந்த உமைய வம்ச ஆட்சி வீழ்ச்சியுற்றதும் அப்பாசியர் ஆட்சியைக் கைப்பற்றினர். அப்பாசிய ஆட்சியின் பிற்காலத்தில் வந்த ஆட்சியாளர்கள் சமய ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பலவீனர்களாகக் காணப்பட்டமையினால் கிரேக்க தத்துவம் மிக இலகுவில் இஸ்லாத்தினுள் நுழைந்து கொண்டது. இதன் காரணமாக ''முஹ்தஸீலா'' போன்று பல பகுத்தறிவுவாத இயக்கங்கள் முஸ்லிம்கள் மத்தியில் தோன்றி இஸ்லாத்தின் அடிப்படையினையே ஆட்டங்காணச் செய்ய முயற்சித்தன. அவைகளின் கோரப்பிடியிலிருந்து இஸ்லாத்தினை மீட்பதற்கு தத்துவார்த்த ரீதியாகப் போராடிய அறிஞர்களே இவ்விருவருமாகும்.

இமாம் கஸ்ஸாலி ஒரு இஸ்லாமிய சட்டநிபுணர் மட்டுமன்றி பல் துறைசார்ந்த தத்துவமேதையுமாகும். இவர் பாரசீகத்தின் தூஸ் (தபறானி) எனும் பகுதியில் கஸாலா எனும் கிராமத்தில் கி.பி. 1072 இல் பிறந்து 55 வருடங்கள் மட்டுமே வாழ்ந்து மரணித்தார். கஸாலா கிராமத்தில் பிறந்தபடியினாலேயே கஸ்ஸாலி என அழைக்கப்பட்டார். தமது குறுகிய கால வாழ்க்கைக்குள்ளேயே ஒழுக்கவியல், மெய்யியல், அளவையியல் பற்றியெல்லாம் இருபத்தியைந்துக்கு மேற்பட்ட நூல்களை எழுதினார். அல்முன்கித் மினல்லழால் (தவறிலிருந்து இரட்சிப்பவன்), தபகாதுல் பில்சபா (தத்துவவாதிகளின் அழிவு), மீஸானுல் அமல் (அளவையியல்), இஹ்யா உலுமுத்தீன் போன்றவை குறிப்பிடத்தக்கவைகளாகும். இவைகள் பிரென்சு, ஜேர்மனி, ஆங்கில மொழிகளிலும் பெயர்க்கப்பட்டன. பொதுவாக இமாம் அவர்கள் தப்ஸீர் (அல் – குர்ஆன் விளக்கவுரை), பிக்ஹஜ் (சட்டக்கலை), தஸவ்வுப் (சூபித்துவம்), தர்க்கம், தத்துவம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் புலமை பெற்றிருந்தார்.

இவர் வாழ்ந்த காலை சூபித்துவத்தின் (ஆன்மீகவாதம்) தாக்கம் காணப்பட்டமையினால் தத்துவ அறிஞராகவிருந்தும் ஒரு ஆன்மீகத் தலைவரின் உதவியுடன் உண்மை வாழ்வு தேடிச் சில காலம் அலைந்தார் சூபித்துவத்தினூடாகத்தான் இஸ்லாமிய தத்துவத்தை அறிய முடியும் என்பது இவரது ஆரம்பகாலக் கருத்தாகவிருந்தது. மனிதனின் ஆன்மா ஆவி மயமானதும், சூட்சுமமானதுமாகும். 'சர்வான்மாவின் ஒரு நிழலே' அது என்பது இவரின் கொள்கையாகும்.

மனிதனின் பரிணாமத்தைப் பற்றிக் கூறும்போது 'அவன் அறிவிலியாகப் பிறந்து படிப்படியாக அறிவு விருத்தியுற்றுப் பூரணத்துவம் அடைகிறான். அறிவில் முதலில் ஸ்பரிச அறிவும் பின்னர் பார்வை, கேள்வி, சுவை, நாற்றம் என்பன ஒன்றன் பின் ஒன்றாக ஏற்பட்டு இறுதியாக பகுத்தறியும் நிலை தோன்றுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு அறிவுண்டு. அதுதான் கண்காணாத அந்தரங்க விடயங்களை அறியக்கூடிய அறிவு. அந்த அறிவு சிலருக்கே உண்டு. அந்தச் சிலர்தான் தீர்க்கதரிசிகள். இவர்களின் சொல்லும், செயலும் விஷேடமானவை மனிதனால் பின்பற்றத் தகுந்தவை'' என்றார். மேலும், 'மனிதனுக்கு

இரண்டு இதயங்கள் உள்ளன. அதிலொன்று உடம்புக்கு மத்தியில் அமைந்து இரத்தோட்டம் முதலான வேலைகளைச் செய்கின்றது. மற்றையது ஆன்மீகச் செயலுக்கு மத்திய தளமாக விளங்குகிறது. இரண்டும் 'கல்பு' (மனம்) என்றே பெயர் பெறுகின்றது என்றும் விளக்கினார்.

கஸ்ஸாலி அவர்கள் லௌஹீக வாழ்வைவிட ஆன்மீக வாழ்வுக்கு அழுத்தம் கொடுத்தமையினால் ஒரு சூபி எனக் குற்றம் சாட்டப்பட்டார். இருந்தும் இவர் தத்துவக் கலையை சமய சட்டக் கலையால் தோற்கடிக்க அரும்பாடுபட்டு வெற்றி கண்டார். இதன் காரணமாகவே அவருடைய புரட்சிகரமான சிந்தனைகள் இன்றும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

வங்கக்கவி அல்லாமா இக்பாலின் மூதாதையினர் காஷ்மீரைச் சேர்ந்தவர்களாகும். இவர் இந்தியாவிலும் அதை சூழவுள்ள நாடுகளிலும் வாழ்ந்த முஸ்லிம்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தமது சிந்தனைகளை தோற்றுவித்தார். பண்பாடு, கல்வி, முயற்சி, தன்மானம் என்பன குறைந்தோராக முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என மனம்வருந்தினார். முஸ்லிம்கள் கிரேக்க தத்துவத்தின் பிடியிலிருந்து விடுபட வேண்டும் எனும் நோக்கில் பல்லாயிரக் கணக்கான கவிதைகளை எழுதிக் குவித்தார். ருமுஸ்பிகுதி, சபூரேஅஜம், பயாமே மஸ்ரக், ஜாவித் நாமா, அஸ்ராரேகுதி எனும் இவருடைய நூல்கள் ஈரான் மொழியில் எழுதப்பட்டவைகளாகும். அஸ்ராரேகுதி என்ற நூலை கேம்பிறிஜ் பல்கலைக்கழக அரபுத்துறை பேராசிரியர் 'நிக்கல்ஸன் ' ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இதன் காரணமாக கவிஞர் இக்பாலின் புகழ் கிழக்கில் மட்டுமன்றி மேற்கிலும் பரவியது.

ஆரம்பத்தில் இவரும் கஸ்ஸாலியைப் போன்று சூபித்துவத்தில் விருப்புக் கொண்டு சூபிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் பெரும்பாலான சூபிகள் கைக்கொள்ளும் தன்னொறுக்கக் கொள்கையை அவர் விரும்பவில்லை. இது பௌத்த நிர்வானக் கொள்கையை ஒத்ததால் முஸ்லிம்கள் பின்பற்றக் கூடாது என்பது இவருடைய வாதமாகும். ஒருவன் தனது புலன்களை ஒறுத்து, தன்னை நிராகரிக்காமல் அங்கீகரிக்க வேண்டும் என்பதே இவருடைய கொள்கை. மனிதன் இறைவனை எவ்வளவுக் கெவ்வளவு நெருங்குகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு பூரணத்துவம் அடைகின்றான். அவன் அவ்வாறு சமீபிக்கும்போது அவன் இறைவனால் சுவீகரிக்கப்படுவதில்லை. மாறாக இறைவனின் தெய்வீகத்தன்மையை அவன் சுவீகரிக்கின்றான் எனக் கொள்கை விளக்கம் கொடுத்தான்.

இவருடைய ஆரம்பகாலக் கருத்துக்கள் ஆன்மீகவாதத்துடன் தொடர்புடையன போன்று தோன்றியதால் இவரும் சிந்தனைத் தெளிவற்ற ஒரு சூபி எனக் கருதப்பட்டார். ஆனால் அவருடைய போக்கு அதற்கு முரணானது என்பதை பிற்காலத்தில் பலர் உணர்ந்தனர்.

"சூபித்துவம் என்பது பிளேட்டோவின் கருத்துக்களுடன் இந்து சமயத்தின் வேதாந்த



சித்தாந்தங்கள் கலந்தது. மேலும் சூபித்துவத்தின் போதைதரும் விஷம் கலந்த கருத்துக்கள் அல்குர்ஆனின் தெளிவான சட்டதிட்டங்களுக்கு முரணானவை" என அல்லாமா இக்பால் கூறுவதிலிருந்து அவர் சூபித்துவக் கொள்கைக்கு எதிரானவர் என்பது புலனாகின்றது.

கவிஞர் இக்பால் நவீன யுகத்தில் ஒரு முஸ்லிம் எதிர்கொள்ளக்கூடிய புதிய சவால்களுக்கான விடைகளை இஸ்லாத்தின் கோட்பாடுகளிலிருந்து எடுத்துரைத்தார். அவைகள் முஸ்லிம்களைத் தட்டியெழுப்பின. இவர் தனது 'ஷிக்வா' (முறையீடு) எனும் கவிதை நூலை 1909 இல் லாகூரில் நடைபெற்ற 'ஹிமாயத்துல் இஸ்லாம்' மகாநாட்டில் பாடியபோது உலமாக்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்நூல் அவருடைய முறையீட்டுக்கு இறைவன் பதில் அளிப்பதுபோன்று அமைந்திருந்தது. இஸ்லாத்தில் அதீத பற்றுக் கொண்ட தனது ஷிக்வாவை பாடினார் என்பதை அன்றைய உலமாக்கள் பலர் புரியத் தவறிவிட்டனர்.

உனக்காகவே போர்க்களத்தில் அணிவகுத்தோர்
நாங்கள் மட்டுந்தானே!
சில சந்தர்ப்பங்களில் கட்டாந் தரையிலும்
சில நேரங்களில் கடல்நீரிலும் களமமைத்துச்
சமர்புரிந்தோம்.
ஐரோப்பாவின் தேவாலயங்களிலும் நின்று
சில சந்தர்ப்பங்களில் அதான் (பாங்கு) முழங்கினோம்
ஆபிரிக்கக் கண்டத்தின் பழக்கக் காய்ந்த
சுடுமணலிலும் உன் திருநாமம் ஒலித்தோம்
மகிதலம் ஆழ்வோரின் மகோன்னதம் எதுவும்
எங்கள் கண்களை மயக்கவில்லை !
வாளாயுதத்தின் நிழலிலும் நாங்கள்
திருக்கலிமா புகன்று வந்தோம்.

எனும் இப்பாடல் (ஷிக்வா) கவிஞர் இக்பால் துறவறத்தை ஆதரிப்பவரல்ல, உலக முஸ்லிம்களுக்காக வாழ்ந்தவர் முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பாதுகாக்க பாடுபட்டவர் என்பதைத் தெளிவாக்குகின்றது. இவருடைய தெளிவான சிந்தனைகள் உலகம் வாழும்வரை நிலைத்துநிற்கும் என்பதில் ஐயமில்லை.

உசாத்துணைகள்

1. ஷிக்வா ஜவாபே ஷிக்வா
2. இஹ்யா உலூமுத்தீன்
3. சிந்தனைப்போக்கில் திருப்பத்தை ஏற்படுத்திய இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

# அவளுக்கு
# குறிப்பும் ஸலவாத்தும்



மெழுகின் வெளிச்சத்தில்
மூளை கொதிக்க
தூரத்தில் வானொலியின் ஒலிபரப்பு
முடிந்து போகும் ஓசையது.

கண்களை இறுக்கி மூடியும்
தலையணைக்குள் முகம் புதைத்தும்
புரண்டு படுத்துப் பார்க்கிறேன்.
ரகசியமாய் உன் பெயரை
உச்சரித்துக் கொள்கின்றேன்
கொஞ்சமாய் அழகிறேன்.

என் சின்னதான அசைவுகள் கூட
உனக்குள் அறிவிக்கப்படும் போது
உன் இடப் பெயர்வுச் செய்திகூட
எனக்குள் அந்நியமாகிப் போனதேன்?

உனதான சில நினைவுகள்
மூளையின் நரம்பு மண்டலத்தை
நச்சுத் திரவமாய் தடவுவதேன்?

கொஞ்சம் பொறு
மனசைக் கல்லாக்க முயல்கிறேன்.
அது வரைக்கும் என்னை
நீ யாரென்று கேட்டுவிடாதே.

எங்கோ தூரத்தில்
குறிப்பும் ஸலவாத்தும் கூறி
ஒலிபரப்பு முடியும் ஓசை கேட்கிறது.

தமீம்




# KANDY JEWEL HOUSE

*Excellent Craftsmanship,
Exquisite Design and
Genuine 22 Kt.
Sovereign Gold Jewelers*

**KANDY JEWEL HOUSE**
A-I Sulaiman Complex,
Main Street, Akkaraipattu - 02.
Tel: 067 - 78441, Res: 067 - 77196 Fax: 067 - 78441

# MIIT

*Management Institute Of Information Technology,*

FISCAL ROAD, AKKARAIPATTU - 03.

## LEADERSHIP & MANAGEMENT COURSES

- Diploma in Leadership & Management
- Diploma in Business Management
- Diploma in Marketing Management
- Diploma in Mondersori Education Management



## COMPUTER COURSES

- Programming Languages
- Certificate in Word Processing
- Certificate in Spreadsheet
- Certificate in Computer Studies
- Diploma in Computer Studies
- Diploma in Desktop Publishing
- Diploma in Computer Science
- Diploma in Computerized Accounting
- Diploma in Hardware Technician
- Junior Diploma in Computer

தேசிய சர்வதேச
தொழில் சந்தையினை
கருத்தில் கொண்டு சர்வதேச தரத்திலான
தொழில்வான்மையாளர்களை உருவாக்க
**MIIT** முன் வந்துள்ளது.

## ENGLISH COURSES

- Diploma in English
- Spoken English
- Certificate in English
- Basic English

எமது **MIIT** நிறுவனம் மிக விரைவில் G.A.Q, B.A, AAT வகுப்புக்களையும் மிகவிரைவில் ஆரம்பிக்கவுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு :

Course Director .

**MIIT** Akkaripattu